(32) 160877

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டம்.

---

[ 1979, ஜூன் மாதம் 28 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. ]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1979, யூன் மாதம் 29 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 2.00 தபாற் செலவு : ரூபா 1.00

# 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டம்

[1979, ஜூன் மாதம் 28 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 74/78
1128

ஆரம்ப நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும், தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம், 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இது, கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாருன அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I
## பொது

ஆரம்ப நீதிமன்றங்களின் குடியியல், குற்றவியல் நியாயாதிக்கம், புறநீங்கலானதாக இருக்க வேண்டும் என்பது.

2. ஆரம்ப நீதிமன்றங்களின் குடியியல், குற்றவியல் நியாயாதிக்கம், இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, புறநீங்கலானதாக இருத்தல் வேண்டும்.

ஆரம்ப நீதிமன்றங்களின் புறநீங்கலான நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட வழக்குகளின், நீதிமன்றங்களின் கடமை.

3. மாவட்ட நீதிமன்றம் ஒன்றின் முன்னர் அல்லது நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் முன்னர் தொடுக்கப்பட்ட ஏதேனும் குடியியல் வழக்கிலாயினுஞ்சரி அல்லது குற்றவியல் வழக்கிலாயினுஞ்சரி, சம்பந்தப்பட்ட வழக்கு ஆரம்ப நீதிமன்றமொன்றின் புறநீங்கலான நியாயாதிக்கத்துக்குட்பட்ட ஒன்றெனை அவ்வழக்கு நடவடிக்கைகளின் ஏதேனும் கட்டத்தில் அத்தகைய நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்றவிடத்து, அந் நீதிமன்றமானது அவ்வழக்கினை மேற்கொண்டு விசாரிப்பதை நிறுத்தலாம் என்பதுடன், கட்சிக்காரர்களை அத்தகைய ஆரம்ப நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துதலும் வேண்டும்; அத்துடன் அது, அத்தகைய வழக்கு ஒரு குடியியல் வழக்காக இருக்குமிடத்து, நியாயமானதெனக் காணக்கூடியவாருன செலவுத்தொகை பற்றிய அத்தகைய கட்டளையையும் ஆக்கலாம்.

குற்றவியல் வழக்கை நீதிவான் நீதிமன்றத்துக்கு இடமாற்றும்படி பணிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது சட்டத் துறைத் தலைமையதிபதிக்கு உள்ள உரிமை.

4. (1) ஆரம்ப நீதிமன்றமொன்றின் புறநீங்கலான நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் வழக்குத் தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை அத்தகைய நீதிமன்றத்தில் முடிவுறுதிருக்கின்றவிடத்தும், அச்சூழ்நிலைகளில் அது தோதானதாய் இருக்குமெனக் கருதப்படுகின்றவிடத்தும், அக்கறையுள்ள எவரேனும் கட்சிக்காரரால் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றமோ அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியோ அத்தகைய குற்றவழக்குத் தொடுப்பினை அல்லது வழக்கு நடவடிக்கையைப் பணிப்பில் குறித்துரைக்கப்படும் நீதிவான் நீதிமன்றமொன்றுக்கு இடமாற்றும்படி பணித்தல், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

2—எ 42097—6,550 (06/79)

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்பு ஒன்று, சம்பந்தப்பட்ட வழக்கு எந்த ஆரம்ப நீதிமன்றத்தில் முடிவுறுதிருக்கின்றதோ அந்த நீதிமன்றத்தின் நீதிபதிக்கு அறிவிக்கப்படுகின்றவிடத்து, வழக்கினை மேற்கொண்டு விசாரித்தலை அவர் நிறுத்துதல் வேண்டும் என்பதுடன், வழக்கின் பதிவேட்டையும் சம்பந்தப்பட்ட எல்லாப் பத்திரங்களையும் அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படும் நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நீதிவான் நீதிமன்றமானது, அதற்கு இடமாற்றப்பட்ட அத்தகைய வழக்கினை அந்த நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு குற்றவழக்குத் தொடுப்பு அல்லது வழக்குநடவடிக்கை என்றுற்போன்று விசாரித்தலும் விளங்குதலும் தீர்மானித்தலும் வேண்டும்; அத்துடன் அது அவ்வாறு செய்வதற்கு முழுத் தத்துவமும் நியாயாதிக்கமும் உடையதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தத்துவமும் நியாயாதிக்கமும் அதற்கு உரித்தாக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

வழக்கை மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

5. ஆரம்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கப்பட்ட ஏதேனும் குடியியல் வழக்கு அல்லது வழக்குநடவடிக்கை, அதில் சம்பந்தப்பட்டுள்ள சந்தருப்பங்கள் அல்லது பிரச்சினைகள் காரணமாக இட நியாயாதிக்கம் கொண்டிருக்கின்ற மாவட்ட நீதிமன்றமொன்றின் முன்னிலையில் விளங்கப்படுதல் மிகவும் தோதானதாயிருக்கலாமெனக் கட்சிக்காரர்களுள் ஒருவரால் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின்மீது அல்லது வேறுவகையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தோன்றுமாறு செய்யப்படுமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின் பதிவேட்டை அல்லது நாட்குறிப்பேட்டை அழைப்பித்துப் பரிசோதித்தலும், ஆரம்ப நீதிமன்றத்தில் வழக்குநடவடிக்கைகளை நிறுத்தி வைத்தலும், அத்தகைய வழக்கினை விளங்கித் தீர்மானிப்பதற்கென அத்தகைய மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றுகின்ற கட்டளையை ஆக்குதலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாய் இருத்தல்வேண்டும். அத்தகைய கட்டளையானது, வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எந்த ஆரம்ப நீதிமன்றத்தில் முடிவுறுதிருக்கின்றதோ அந்த நீதிமன்றத்தின் நீதிபதிக்கு அறிவிக்கப்பட்டதன்மேல், அவர், அவ்வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கையை மேற்கொண்டு விசாரித்தலை நிறுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வழக்கின் அல்லது வழக்குநடவடிக்கையின் பதிவேட்டையும் சம்பந்தப்பட்ட எல்லாப் பத்திரங்களையும் கட்டளையில் குறித்துரைக்கப்படும் மாவட்ட நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும். அதன்மேல் அத்தகைய மாவட்ட நீதிமன்றமானது, அத்தகைய வழக்கினை அல்லது வழக்குநடவடிக்கையினை, அது அம்மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கு அல்லது வழக்குநடவடிக்கை என்றுற்போன்று விசாரித்தலும் விளங்குதலும் தீர்மானித்தலும் வேண்டும்; அத்துடன் அது அவ்வாறு செய்வதற்கு முழுத் தத்துவமும் நியாயாதிக்கமும் உடையதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தத்துவமும் நியாயாதிக்கமும் அதற்கு உரித்தாக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

6. (அ) ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறுதிருக்கின்ற ஏதேனும் தவறுக்கான ஏதேனும் குற்றவழக்குத் தொடுப்பு தொடர்பில், வழக்கின் அச்சூழ்நிலைகளில், எத்தண்டத்தை விதிப்பதற்கு ஆரம்ப நீதிமன்றம் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அத்தண்டத்தால் அத்தவறு போதுமான அளவில் தண்டிக்கப்படக்கூடியதல்லவென ; அல்லது

(ஆ) அந்நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறுதிருக்கின்ற ஏதேனும் குடியியல் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை தொடர்பில், அவ்வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை மாவட்ட நீதிமன்றமொன்றின் முன்னிலையில் மேலும் தோதாக விளங்கப்படலாமென,

ஏதேனும் ஆரம்ப நீதிமன்றத்துக்குத் தோன்றுமாறு செய்யப்படுமிடத்து, விடயத்துக்கேற்றவாறு, அக்குற்றவழக்குத்தொடுப்பை அல்லது குடியியல் வழக்கை அல்லது வழக்குநடவடிக்கையை மேற்கொண்டு விசாரிப்பதை இடைநிறுத்துவது அத்தகைய ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும்; அத்துடன் அதுபற்றி, 4 ஆம் பிரிவின்கீழ் அல்லது 5 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றைப் பெறுவதற்கான நோக்குடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அவர் அறிக்கைசெய்தலும் வேண்டும்.

*வேறோர் இடத்தில் மிகவும் தோதாக விளங்கப்படற்பாலதான வழக்குப் பற்றி, கட்டளைக்காக, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அறிக்கை செய்தல்.*

7. (1) ஆரம்ப நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையிலான ஏதேனும் குற்றவழக்குத்தொடுப்பின், குடியியல் வழக்கின் அல்லது வழக்குநடவடிக்கையின்போது அத்தகைய குற்றவழக்குத்தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்குநடவடிக்கை அந்த ஆரம்ப நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்குட்பட்டதல்லவெனத் தோன்றுகின்றவிடத்து, வழக்குநடவடிக்கைகளை நிறுத்திவிட்டு அக்குற்றவழக்குத்தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்குநடவடிக்கை எக்கட்சிக்காரரால் தொடுக்கப்பட்டதோ அக்கட்சிக்காரரைத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துதல் அத்தகைய ஆரம்ப நீதிமன்றத்தின் கடமையாதல் வேண்டும்.

(2) ஆரம்ப நீதிமன்றமொன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழ், ஏதேனும் குற்றவழக்குத்தொடுப்பின், குடியியல் வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின்மீதான நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு அக்குற்றவழக்குத் தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்குநடவடிக்கை எக்கட்சிக்காரரால் தொடுக்கப்பட்டதோ, அக்கட்சிக்காரரைத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துமிடத்து, அக்குற்றவழக்குத் தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்குநடவடிக்கை, அதே தவறு தொடர்பில் அல்லது கருமம் தொடர்பில் ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் ஒரு குற்றவழக்குத் தொடுப்பை, குடியியல் வழக்கை அல்லது வழக்குநடவடிக்கையைத் தொடுப்பதற்குத் தடையாகச் செயலுறுதல் ஆகாது.

*வழக்கானது நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டதாகவிருக்கின்றவிடத்து, தகுதி வாய்ந்த நீதிமன்றத்துக்குக் கட்சிக்காரர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய கடமை.*

## பாகம் II

### தண்டனை விதிப்பதற்கான தத்துவங்கள்

8. (1) ஆரம்ப நீதிமன்றமொன்று பின்வரும் தண்டனைத்தீர்ப்புகளுள் எதனையும் அளிக்கலாம் :—

(அ) மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனை ;

*ஆரம்ப நீதிமன்றம் அளிக்கக்கூடிய தண்டனைத் தீர்ப்புகள்.*

(ஆ) இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணம்;

(இ) தவறுளர் பதினறு வயதுக்குக் கீழ்ப்பட்டவராயின் பிரப்பங்கீறு கொண்டு அடித்தல்;

(ஈ) மேற்சொல்லப்பட்ட தண்டனைத் தீர்ப்புகளில் எவையேனும் இரண்டை இணைத்த ஏதேனும் சட்டமுறையான தண்டனைத் தீர்ப்பு.

(2) குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப் பணத்தைச் செலுத்தத் தவறும் சந்தருப்பத்தில், இப்பாகத்தின் ஏற்பாடு களுக்கமைய, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி—

(அ) குற்றப்பணத் தொகை இருபத்தைந்து ரூபாவை விஞ்சாத விடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏழு நாட்களை விஞ்சாத வொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண் டனைத் தீர்ப்பளிக்கலாம்;

(ஆ) குற்றப்பணத்தொகை இருபத்தைந்து ரூபாவை விஞ்சியும் ஆனல் ஐம்பது ரூபாவை விஞ்சாதுமுள்ளவிடத்து, குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு பதினன்கு நாட்களை விஞ்சாதவொரு காலத்துக் கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்க லாம்;

(இ) குற்றப்பணத்தொகை ஐம்பது ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைத் தீர்ப் பளிக்கலாம்.

(3) இப்பிரிவிலுள்ள எதுவும், இச்சட்டத்தினல் அல்லது வேறு ஏதே னும் சட்டத்தினல் ஆரம்ப நீதிமன்றமொன்றுக்கு அளிக்கப்படக்கூடிய தண்டனை விதிப்பதற்கான சிறப்புத் தத்துவங்கள் எவற்றையும் மதிப்புக் குறைப்பதாகப் பொருள்கொள்ளப்படலாகாது.

*ஏழு நாட் களுக்குக் குறைந்த காலத்துக் கான மறியற் றண்டனைத் தீர்ப்பு அளித்த லாகாது.*

9. இச்சட்டத்தில், அல்லது தண்டனைச்சட்டக் கோவையில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணுக/எது எப்படியிருப்பி னும், குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக்காகவாயினுஞ்சரி அல்லது வேறெதற்காகவாயினுஞ்சரி ஏழு நாட்களுக்குக் குறைந்த காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பை ஆள் எவருக்கும் ஆரம்ப நீதிமன்றம் அளித்த லாகாது.

*மறியற்றண் டனைக்குப் பதிலாக நீதி மன்றச் சுற் றெல்லைக்குள் தடுத்துவைத் தலாகிய தண்டனைத் தீர்ப்புகள்.*

10. குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக்காகவாயினுஞ்சரி அல்லது வேறெதற்காகவாயினுஞ்சரி ஆரம்ப நீதிமன்றமொன்று, தவறுளர் ஒருவ ருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிப்பதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினல் அல்லது வேறு சட்டத்தினல் எச்சூழ்நிலைகளில் தத்துவ மளிக்கப்பட்டுள்ளதோ அப்படியான எவையேனும் சூழ்நிலைகளில் மறியற் றண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதற்குப் பதிலாக, நீதிமன்றம், கட் டளையின்மூலம், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியதும் பிற் பகல் 4 மணிக்கு மேற்படாததுமான அத்தகைய நேரம்வரையில், அக் கட்டளை இடப்படும் நாளன்று நீதிமன்றச் சுற்றெல்லைக்குள் தவறுள ரைத் தடுத்துவைக்குமாறு கட்டளையிடலாம்.

குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக் காக மறியற் றண்டனைத் தீர்ப்பளிப் பதற்கு ஆரம்ப நீதி மன்றத்திற் குள்ள தத்து வம்.

11. (1) குற்றப்பணமொன்று செலுத்தத் தவறியமைக்காக, அத்தகைய தவறுகைக்கெனச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய காலத்துக்கான மறியற்றண்டனையை, ஆரம்ப நீதிமன்றமொன்று தீர்த்தளிக்கலாம்; ஆயின், தீர்த்தளிக்கப்பட்ட அத்தகைய மறியற்றண்டனைக் காலமானது இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்களை விஞ்சுதலாகாது.

(2) இப்பிரிவின்கீழ் தீர்த்தளிக்கப்பட்ட மறியற்றண்டனை, 8 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்தால் தீர்த்தளிக்கப்படற்பாலதான ஆகக்கூடிய காலத்துக்கான தனிநிலையான மறியற்றண்டனைத் தீர்ப்போடு சேர்த்து மேலதிகமானதாக இருக்கலாம்.

சமுதாய சேவைக் கட்டளை.

12. (1) ஆரம்ப நீதிமன்றமொன்று குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளித்ததன்மேல் மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதற்குப் பதிலாக அல்லது குற்றப்பணத்தைக் கொடுப்பனவு செய்யத் தவறியமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதற்குப் பதிலாக அரசின் செய்திட்டமொன்றில் அல்லது அரச ஆதரவுபெற்ற செய்திட்டமொன்றில் அல்லது வேறெங்கேனும் பெயர்குறிக்கப்பட்ட இடமொன்றில் குறித்திடப்பட்ட சேவையைப் புரியும்படி குற்றஞ்சாட்டப்பட்ட ஆளைப் பணிக்கும் கட்டளையொன்றை (இது இதனகத்துப்பின்னர் "சமுதாய சேவைக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பதியலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதியப்பட்ட சமுதாய சேவைக் கட்டளையொன்று, அந்நீதிமன்ற நீதிபதி பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) சமுதாய சேவைக் கட்டளையொன்றின் நடைமுறைக் காலமானது மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது.

(4) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எந்த ஆள் தொடர்பில் சமுதாய சேவைக் கட்டளையொன்று பதியப்பட்டதோ அந்த ஆள், பெயர் குறிக்கப்பட்ட வேலையிடத்துக்கு வரத் தவறினால், அல்லது அவ்வேலையிடத்துக்கு வந்திருந்தும் குறித்திடப்பட்ட சேவையைச் செய்யத் தவறினால் அல்லது வேலைக்கு வருவதில் கிரமமில்லாதவராக இருந்தால் அல்லது பெயர் குறிக்கப்பட்ட இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது அதன் மீது கட்டுப்பாடு உள்ள ஆள் திருப்தியடையும்படி வேலை செய்யாதிருந்தால் அல்லது வேறு வகையில் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறினால், அப்போது அதை இல்லாதொழித்தலும், நீதிமன்றம் தக்கதெனக் கருதும் அத்தகைய மறியற்றண்டனைத் தீர்ப்பை விதித்தலும் அந்த ஆரம்ப நீதிமன்றத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(5) சமுதாய சேவைக் கட்டளையின் நடைமுறைக் காலம் முழுவதன் போதும் பெயர்குறிக்கப்பட்ட இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அல்லது அதன்மீது கட்டுப்பாடு உள்ள ஆள், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் வருகை தருதல் பற்றியும் அவரது வேலைபற்றியும், அத்துடன் சமுதாய சேவைக் கட்டளை இணங்கியொழுகப்படுகின்றதா அல்லது இணங்கியொழுகப்பட்டிருக்கின்றதா என்பதைப் பற்றியும் கூறுவதான ஓர் அறிக்கையை

சமுதாய சேவைக் கட்டளையைப் பதிந்த ஆரம்ப நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பிவைத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய அறிக்கை அத்தகைய விடயங்களில் இறுதியானதாதலும் முற்றானதாதலும் வேண்டும்.

நிறுத்திவைக்கப்படும் மறியற்றண்டனைத் தீர்ப்பு.

13. (1) ஆரம்ப நீதிமன்றமொன்று, தவறாளர் ஒருவர்மீது மறியற்றண்டனைத் தீர்ப்பு விதிக்குமிடத்து, அந்நீதிமன்றமானது, கட்டளைத் தேதியிலிருந்து பதினெட்டு மாதகாலப் பகுதியினுள் அத்தகைய தவறாளர் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்பட வேண்டிய இன்னொரு தவறைப் புரிந்தாலன்றி, அத்தண்டனைத் தீர்ப்புப் பயனுடையதாக வருதலாகாதெனக் கட்டளையிடலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆரம்ப நீதிமன்றமொன்று ஆக்குமிடத்து, நிறுத்திவைக்கப்படும் மறியற்றண்டனைத் தீர்ப்புகள் பற்றிய 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளல்லாத ஏனைய ஏற்பாடுகள் அக்கட்டளைக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்திற்காக, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதினெட்டு மாத காலப்பகுதி அந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள "நடைமுறைக் காலம்" எனக் கருதப்படுதலும் வேண்டும்.

ஓரே விளக்கத்தில் பல்வேறு தவறுகளுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து வழங்கப்படும். தண்டனைத்தீர்ப்பு.

14. (1) ஆளொருவர், எவையேனும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனிவேறு தவறுகளுக்காக ஓரே விளக்கத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்படும்போது, அத்தகைய தவறுகளுக்கென விதித்துரைக்கப்பட்டதும், ஆரம்ப நீதிமன்றம் விதிப்பதற்கு ஆற்றலுடையதுமான பல்வேறு தண்டனைகளை அத்தகைய தவறுகளுக்காக நீதிமன்றமானது (3) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக அவர்மீது விதிக்கலாம்; அத்தகைய தண்டனைகளில் மறியற்றண்டனையும் அடங்கியிருந்தால், அவை அல்லது அவற்றில் எவையும் ஏககாலத்தில் தொடங்கவேண்டுமென நீதிமன்றம் கட்டளையிட்டாலொழிய, நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குமுறையில் ஒன்று முடிவடைவதன்மேல் மற்றொன்றாகத் தொடங்குதல் வேண்டும் :

ஆயின், கூட்டுமொத்தத் தண்டனையானது, அத்தகைய நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் எவ்வளவு தண்டனையை விதிப்பதற்கு ஆற்றல் கொண்டிருக்குமோ அந்தத் தண்டனை அளவின் இருமடங்கை விஞ்சுதலாகாது.

(2) ஓரே விளக்கத்தில் பல்வேறு தவறுகளுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட விடயத்தில் இப்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட கூட்டுமொத்தத் தண்டனைத் தீர்ப்புகள், மேன்முறையீட்டு நோக்கத்துக்காகத் தனியொரு தண்டனைத்தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தண்டனைச்சட்டக் கோவையின் 55 ஆம், 67 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எத்தகையனவுமான எல்லாத் தவறுகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

15. ஓர் ஆரம்ப நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்வதுடன் அல்லது விடுவிப்பதுடன், முறைப்பாடானது விழலான தென அல்லது அலைக்கழிக்கும் தன்மையதென வெளிப்படுத்தும்போதி லெல்லாம்—

முறைப்பாடு விழலானதாக அல்லது அலைக்கழிக்கும் தன்மையதாக இருக்கும் போது செலவுத்தொகைகளையும் நட்டஈட்டையும் செலுத்துதல்.

(அ) ஐம்பது ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை அரசின் செலவுத்தொகைகளாகவும்; அத்துடன்

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக இருப்பார்களெனின் குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஐம்பது ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை நட்டஈடாகவும்,

செலுத்தும்படி முறைப்பாட்டாளருக்குக் கட்டளையிடுதல் அத்தகைய நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

16. ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போதிலெல்லாம் அல்லது குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுள்ளதென முடிவு செய்யும் ஓர் ஆரம்ப நீதிமன்றம் தவறுளருக்குக் குற்றத்தீர்ப்பளிக்காமலே அவர்மீது நடவடிக்கை மேற்கொள்ள முற்படுமிடத்து, நீதிமன்றத்துக்குப் பொருத்தமானதெனத் தோன்றுகின்றவாறாக இருநூறு சாத அத்தகைய பணத்தொகையை நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் அல்லது அத்தகைய தவணைகளில் தவறு காரணமாகப் பாதிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு நட்டஈடு என்ற வகையில் செலுத்தும்படி தவறுளருக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம். இப்பிரிவின்கீழும் 15 ஆம் பிரிவின்கீழும் தீர்த்தளிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை, நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற் போன்று அறவிடற்பாலதாக இருத்தல் வேண்டும்:

குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் நட்டஈட்டைச் செலுத்துதல்.

ஆயின், தவறுளர் பதினாறு வயதுக்குட்பட்டவராக இருப்பாரெனின், நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதினால், இப்பிரிவின்கீழான கொடுப்பனவு அத்தாது பெற்றோரினால் அல்லது பாதுகாவலரினால் செலுத்தப்படுதல் வேண்டும் எனக் கட்டளையிடலாம்.

17. ஓர் ஆரம்ப நீதிமன்றம் குற்றப்பணமொன்றை அல்லது குற்றப் பணத்தைப் பகுதியாகக் கொண்ட தண்டனைத் தீர்ப்பொன்றை விதிக்கின்றபோதிலெல்லாம், அறவிடப்படும் குற்றப்பணம் முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் தவறு காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆளுக்குச் செலுத்தப்படும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம்.

செலுத்தப்பட்ட குற்றப்பணம் அல்லது அதன் ஏதேனும் பாகம் ஊறுற்ற கட்சிக்காரருக்குச் செலுத்தப்படும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம்.

18. ஓர் ஆரம்ப நீதிமன்றம், குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுள்ளதென முடிவுசெய்து, ஆனால் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் நடத்தை, முன்வரலாறு, வயது, உடல்நிலை அல்லது மனநிலை என்பவற்றை அல்லது எவ்வாறான குற்றந்தணிக்கும் சூழ்நிலையில் தவறு புரியப்பட்டது என்பதைக் கவனத்திற்கொண்டு ஏதேனும் தண்டனை அல்லது பெயரளவிலான தண்டனை தவிர்ந்த வேறு தண்டனை எதனையும் கொடுத்தல் உசிதமற்றதென அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறாக நிபந்

தவறுளர்களை நிபந்தனையின்பேரில் விடுவிக்க அனுமதிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம்.

தனையின் பேரில் தவருளரை விடுவித்தல் உசிதமானதென நீதிமன்றம் அபிப்பிராயப்படும்போதெல்லாம், நீதிமன்றமானது, குற்றத்தீர்ப்பளித்தற்கு முற்படாமலே—

(அ) நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுவதான அத்தகைய கண்டித்தலின்பின்னர் அத்தகைய தவருளரை விடுவிக்குமாறு கட்டளையிடலாம்;

(ஆ) ஐம்பது ரூபாவை விஞ்சாத தொகையிலான அரசின் செலவுத் தொகைகளைச் செலுத்துமாறு அத்தகைய தவருளருக்குக் கட்டளையிடலாம்;

(இ) பதினும் பிரிவின்கீழான நட்டஈட்டைச் செலுத்துமாறு கட்டளையிடலாம்;

(ஈ) நன்னடத்தையுள்ளவராக இருப்பாரெனவும், பதினெட்டு மாதங்களை விஞ்சாததும், நீதிமன்றக் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதுமான அத்தகைய காலத்தினுள் ஏதேனும் நேரத்தில் அழைக்கப்பட்டால் குற்றத்தீர்ப்புக்காக அல்லது தண்டனைத் தீர்ப்புக்காகத் தோன்றுவாரெனவும் கூறும் நிபந்தனையில் பிணைகாரருடன் அல்லது பிணைகாரரின்றி பிணைப்பத்திரமொன்றை அவர் முடிப்பதன்மேல் தவருளரை விடுவிக்கலாம்;

(உ) தவருளர் நன்னடத்தைப் பாதுகாவல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தவருளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம்.

பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகள்.

19. பதினெட்டாம் பிரிவின்கீழான பிணைப்பத்திரமொன்று, நீதிமன்றமானது, அவ்விடயத்தின் குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அந்தப் பிணைப்பத்திரத்தில் உட்புகுத்தப்படற்பாலனவெனக் கட்டளையிடக்கூடியவாருன அத்தகைய நிபந்தனைகளைக் கொண்டிருக்கலாம் :—

(அ) திருடர்களோடும், விரும்பத்தகாத வேறு ஆட்களோடும் கூட்டுச் சேருவதிலிருந்து அல்லது விரும்பத்தகாத இடங்களில் நடமாடுவதிலிருந்து தவருளரைத் தடைசெய்தல்;

(ஆ) குடிபோதையில் இருந்தார் என்பதே தவருக இருக்குமிடத்து அல்லது குடிபோதையின்கீழ் தவறொன்று புரியப்பட்டிருக்குமிடத்து, கிளர்ச்சியூட்டும் மதுவை அருந்தாதிருக்கும்படி கூறுதல்;

(இ) பொதுவாகத் தவருளர் நேர்மையும் முயற்சியுமுள்ள வாழ்க்கையை நடாத்தும்படி செய்தல்;

(ஈ) தவருளர், அவரது பிணைகாரர் எவரேனுமிருப்பின் அவரோடு அல்லது பிணைகாரர்கள் எவரேனும் இருப்பின் அவர்களோடு, கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய கால இடைவேளைகளில், ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் அவரது தனியறையில் தோன்றும்படி ஏற்பாடுசெய்தல்;

(உ) பதினும், 18 ஆம் பிரிவுகளில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாருக நட்டஈட்டையும் அரசின் செலவுத்தொகைகளையும் செலுத்தும்படி பணித்தல்.

20. எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான அவரது பிணைப்பத்திரத்தின் மூலம் குற்றத்தீர்ப்புக்காகவும் தண்டனைத்தீர்ப்புக்காகவும் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றம் பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளை வேறுபடுத்தலாம் என்பதுடன், பிணைப்பத்திரம் விடுவிக்கப்படல் வேண்டும் என்னும் வகையில் அந்த ஆளின் நடத்தை அத்தகையதாயுள்ளதெனத் திருப்தியடைவதன் மேல் பிணைப்பத்திரத்தை விடுவிக்கலாம். — பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளை வேறுபடுத்துவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

21. (1) தவறுாளர் ஒருவர் 18 ஆம் பிரிவின்கீழான அவரது பிணைப்பத்திரத்தின்மூலம், குற்றத்தீர்ப்புக்காகவும் தண்டனைத்தீர்ப்புக்காகவும் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றம், தவறுாளர் அவரது பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளுள் எவற்றையேனும் கடைப்பிடிக்கத் தவறியுள்ளாரென்ற தகவல் பற்றித் திருப்தியடையுமெனில், அது, தவறுாளரையும் அவரது பிணைகாரர்களையும் (எவரேனுமிருப்பின்) அதன் முன்னிலையில் வருகைதருமாறு தேவைப்படுத்தும் அழைப்புக்கட்டளையை வழங்கலாம். — பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளைக் கடைப்பிடித்தற்குத் தவறுாளர் தவறுகின்ற விடயத்திலான ஏற்பாடு.

(2) அத்தகைய அழைப்புக்கட்டளையின்மேல் தவறுாளரதும் அவரது பிணைகாரர்களினதும் (எவரேனுமிருப்பின்) வருகையைப் பெற முடியாதெனின், அத்தகைய நோக்கத்துக்கெனப் பிடியாணையொன்றை நீதிமன்றம் வழங்கலாம்.

(3) தவறுாளர் குற்றத்தீர்ப்புக்காகவும் தண்டனைத்தீர்ப்புக்காகவும் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுவதற்கு அவரது பிணைப்பத்திரத்தின் மூலம் கட்டுப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தவறுாளர் தோன்றும்போது அல்லது கொணரப்படும்போது, அந்நீதிமன்றமானது, சுருக்கவிசாரணையின் பின்னர், அவர், தமது பிணைப்பத்திரத்தின் ஏதேனும் நிபந்தனையைக் கடைப்பிடிப்பதற்குத் தவறிவிட்டாரெனத் திருப்தியடைவதன்மேல், முதலாவது தவறுக்காக அவர்மீது உடனடியாகக் குற்றத்தீர்ப்பளித்துத் தண்டனைத்தீர்ப்பளிக்கலாம்; அல்லது, அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றளிக்கப்பட்ட பாடசாலையொன்றுக்குத் தவறுாளர் அனுப்பப்படவேண்டுமெனப் பிள்ளைகள், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் முதற்றடவையிலேயே நீதிமன்றம் கட்டளையிட்டிருக்கக்கூடியவொன்றாக அவ்வழக்கு இருப்பதுடன் தவறுாளர் வெளித்தோற்றத்தில் பதினாறு வயதுக்குட்பட்டவராகவும் இருப்பாரெனின், அத்தகையதொரு கட்டளையை ஆக்கலாம்.

22. பதினாறு வயதுக்குட்பட்ட எவரேனும் ஆண்பிள்ளையைக் குற்றப்பணம் செலுத்த வேண்டுமென அல்லது மறியற்றண்டனை அனுபவிக்க வேண்டுமெனக் கட்டளையிடுவதற்குப் பதிலாக, உடற்றண்டனைக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 294 ஆம் பிரிவுக்கும் இணங்க, அத்தகைய ஆளுக்குச் சவுக்கடி கொடுக்கப்பட வேண்டுமென ஆரம்ப நீதிமன்றம் கட்டளையிடலாம்: — குறித்தசில வழக்குகளில் சவுக்கடி கொடுத்தல்.

ஆயின், அத்தகைய எவரேனும் ஆள்மீது மெல்லிய பிரப்பங்கீறு கொண்டு ஆறுக்கு மேற்பட்ட கசையடிகளைக் கொடுப்பதற்குக் கட்டளையிடும் தத்துவம் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவருக்குக் கிடையாது.

குற்றப்பணம் தவணைப் பணங்களாகச் செலுத்தப் படலாம்.

23. (1) ஆளொருவர் குற்றப்பணத்துக்கு மாத்திரமும் அத்துடன் அக்குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியதன்பேரில் மறியற்றண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்குமிடத்து, ஆரம்ப நீதிமன்றம் பின்வருவனவற்றுள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்யலாம் :—

(அ) குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கெனக் கால அவகாசம் வழங்கலாம் ;

(ஆ) குற்றப்பணத்தைத் தவணைப்பணங்களாகச் செலுத்தும்படி பணிக்கலாம் ;

(இ) குற்றப்பணம் செலுத்தவேண்டிய ஆள், அக்குற்றப்பணத்தினை அல்லது அதன் ஏதேனும் தவணைப்பணத்தைச் செலுத்துவதற்கென ஒரு பிணைகாரருடன் அல்லது பிணைகாரர்களுடன், அல்லது பிணைகாரரோ பிணைகாரர்களோ இன்றி முறியொன்றை நீதிமன்றம் திருப்திப்படுமாறு கொடுப்பதற்குச் சுதந்திரமுடையவராக இருத்தல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

(2) குற்றப்பணம் தவணைப்பணங்களாகச் செலுத்தப்படவேண்டுமெனப் பணிக்கப்பட்டிருப்பதுடன் ஏதேனுமொரு தவணைப்பணக் கொடுப்பனவு செலுத்தத் தவறப்படுமிடத்து, செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைப்பணக் கொடுப்பனவுகள் தொடர்பிலும் தவறு புரியப்பட்டிருந்தாற்போன்று அதேமாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

## பாகம் III

### குற்றவியல்வழக்குத் தொடுப்புக்களைத் தொடுக்கும் மாதிரி பற்றி

குற்றவழக்குத் தொடுப்புக்களைத் தொடுக்கும் மாதிரி.

24. ஓர் ஆரம்ப நீதிமன்றத்தால் விளங்கப்படற்பாலதான தவறொன்றுக்கான குற்றவியல்வழக்குத்தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை ஒவ்வொன்றும், எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள் அத்தவறு புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், தவறொன்று, பகுதியளவில் ஓர் ஆரம்ப நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள்ளும், பகுதியளவில் இன்னுமோர் ஆரம்ப நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள்ளும் புரியப்படுகின்றவிடத்து, அத்தவறு தொடர்பிலான ஒரு குற்றவியல்வழக்குத் தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை- அத்தகைய நீதிமன்றங்களுள் ஏதேனுமொன்றில் தொடுக்கப்படலாம்.

ஆரம்ப நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்.

25. (1) முறைப்பாட்டாளரால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான முறைப்பாடொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதன்மூலம் அல்லது நீதிமன்றத்துக்கு அனுப்புவதன்மூலம் ஒரு குற்றவியல்வழக்குத் தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை· ஆரம்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படலாம், அல்லது முறைப்பாட்டாளர் அவரது வழக்கை அத்தகைய நீதிமன்ற நீதிபதியிடம் வாய்மொழிமூலம் கூறலாம்;

நீதிபதி அதனை எழுத்திலிடுதல்வேண்டும் என்பதுடன், அதில் முறைப்பாட்டாளரின் கையொப்பத்தையும் பெறுதல் வேண்டும், அல்லது அதனை எழுத்திலிடுவித்துக் கையொப்பமிடுவித்தலும் வேண்டும்; அவ்வாறு எழுத்திலிடப்பட்ட கூற்றே அவ்வழக்கில் முறைப்பாடாக இருத்தல் வேண்டும் :

ஆயின், அந்த முறைப்பாட்டாளர் உள்ளூர் அதிகாரசபையொன்றாக இருக்குமிடத்து, முறைப்பாடானது, அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலரினால், அல்லது அத்தகைய உள்ளூரதிகாரசபையின் சார்பில் தோன்றுவதற்கு உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலரால் கையொப்பமிடப்படலாம். இக்காப்புவாசகத்தில் "உள்ளூரதிகாரசபை" என்பது, அரசியலமைப்பில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய முறைப்பாடு ஒவ்வொன்றும் தேதியிடப்பட்டும், நீதிமன்றத்தின் இலச்சினையைக் கொண்டு இலச்சினையிடப்பட்டும், அது பெறப்பட்ட ஒழுங்குவரிசையின்படி இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த முறைப்பாடு தொடர்பிலான வழக்குநடவடிக்கைகளின் தொடக்கமாக அமைதலும் வேண்டும்.

அழைப்புக் கட்டளையை அல்லது பிடியாணையை விடுத்தல்.

**26.** (1) ஆரம்ப நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து தவறொன்று வெளிக்காட்டப்படுமெனின் நீதிமன்றமானது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின்மீது அல்லது ஆட்களின்மீது, அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் ஏலவே நீதிமன்றத்தின் முன்னிலையில் இல்லாதவிடத்து, அழைப்புக் கட்டளையை விடுத்தல் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முடியாதெனில் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் தலைமறைவாக இருப்பார்களெனின் அல்லது தலைமறைவாக இருக்கக் கூடுமெனின், நீதிமன்றம் பிடியாணையொன்றை வழங்கலாம்.

அழைப்புக் கட்டளை விடுப்பதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

**27.** ஒவ்வோர் ஆரம்ப நீதிமன்றமும் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்கென 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் நீதிவான் நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படும் வழக்குகள் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாதிரியை ஒத்தமுறையில் அதன் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆட்கள்மீதும், நீதிமன்றம் எந்தச் சாட்சிக்காரர்களின் அல்லது வேறு ஆட்களின் வருகை அவசியமானதெனக் கருதுகின்றதோ அந்தச் சாட்சிக்காரர்களின்மீதும் வேறு ஆட்கள்மீதும், அழைப்புக்கட்டளைகளையும் பிடியாணைகளையும் வேறு மன்றாணைகளையும் விடுப்பதற்கும் அத்துடன் ஆவணங்களைக் காண்பிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்கும் முழுத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தோன்றும் போதான நடவடிக்கை முறை.

**28.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் தோன்றும்போது, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி—

(அ) முறைப்பாட்டிலுள்ள விபரங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டொன்றை வகுத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) குற்றச்சாட்டைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்து விளங்கப்படுத்துதல் வேண்டும்; அக்குற்றச்சாட்டிற்கு எதிராகக் காட்டுவதற்கு அவருக்குக் காரணமெதுவுமுண்டா என்றும் அவ

ரிடம் கேட்டல் வேண்டும்; அவர் வரைபாடில்லாக் குற்ற ஒப்பு தல் ஒன்றைச் செய்வாரெனின் தண்டனைத் தீர்ப்பளித்தல் வேண் டும், அல்லது சட்டத்துக்கிணங்க வேறு கட்டளை ஆக்குதல் வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் வரைபாடில்லாக் குற்ற ஒப்புதலொன் றைச் செய்யவில்லையெனின் அல்லது தாம் குற்றவாளியென மன்றுரைப் பதற்கு மறுப்பாரெனின் அல்லது அவர் குற்றவாளியல்லரென மன் றுரைப்பாரெனின், நீதிபதி, 31 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள முறையில் நடவடிக்கையெடுக்க முற்படல் வேண்டும்.

குற்றச் சாட்டை மீளப்பெறல்.

29. (1) துணிபுரை வழங்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் முறைப்பாட்டை மீளப்பெறுவதற்கு விண்ணப்பித்தல் முறைப்பாட்டாள ருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல் நீதி பதி அவ்விண்ணப்பத்தை அனுமதித்துக் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடு தலை செய்தலும் வேண்டும்.

முறைப்பாட் டாளர் வருகைதரா திருத்தல்.

(2) விசாரணைக்காகவோ அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக் காகவோ வழக்கானது பகிரங்க நீதிமன்றத்தில் கூப்பிடப்படும் ஏதேனும் நாளன்று முறைப்பாட்டாளர் காரணமின்றி வராமலிருப்பாரெனின், அவ் வழக்கை வேறொரு நாளுக்குப் பின்போடுதல் முறையானதென ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எண்ணினாலொழிய, அவர், குற்றஞ்சாட்டப்பட்ட வரை விடுதலைசெய்யலாம். நீதிபதி அவ்வாறு பின்போடும்படி கட்டளையிடு வதன் மேல், ஐம்பது ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றைச் செல வுத்தொகையாகக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குச் செலுத்தும்படி கட் டளையிடலாம்:

ஆயின், எவ்வாறாயினும், முறைப்பாட்டாளர் நியாயமான காலத்துக் குள் தோன்றி, அவர் வருகைதராமை சுகவீனத்தினால், விபத்தினால் அல் லது அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு காரணத்தினால் நிகழ்ந்தது என ஆரம்ப நீதிமன்ற நீதிபதியைத் திருப்திப்படுத்து வாரெனின், அத்தகைய நீதிபதி, இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட் டளை எதனையும் இல்லாதாக்குதல் வேண்டும்.

(3) துணிபுரை வழங்கப்படுமுன்னர் எந்நேரத்திலாயினும், குற்றஞ் சாட்டப்பட்டவர், எழுத்தில் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, நீதிபதியினால் விடுவிக்கப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய விடுவிப்புக்கு முன்னர், நீதிபதி தமது தற்றுணிபின்படி சட்டத்துறைத் தலைமையதிபதியைக் கலந்தா லோசிக்கலாம்.

ஆரம்ப நீதிமன்றம் தேவைப்படும் போது வழக்கு நட வடிக்கைகளைச் சட்டத்துறைத் தலைமையதி பதிக்கு அனுப்பி வைத்தல்.

30. ஓர் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, எந்தக் குற்றவியல் வழக்கின் விளக்கம் அவர் முன்னிலையில் நடாத்தப்பட்டிருக்கின்றதோ அல்லது நடாத்தப்படுகின்றதோ அந்தக் குற்றவியல் வழக்கின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்களைச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் எழுத்து மூலம் தேவைப்படுத்தப்படும்போதெல்லாம், உடனடியாக அவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்:

ஆயின், சட்டத்துறைத் தலைமையதிபதி பதிவேடு தமக்குக் கிடைக்கப் பெற்றதிலிருந்து ஒரு மாதகாலத்திற்குப் பிந்தாமல் அப்பதிவேட்டை நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

விசாரணையின் போதான நடவடிக்கை முறை.

31. (1) குற்றச்சாட்டுக்குறித்து வாய்மொழிமூலம் விசாரித்தலும், தோதானவிடத்து இணக்கத்தீர்வொன்றுக்குக் கட்சிக்காரர்களைக் கொணருவதற்குச் சட்டமுறையான எல்லா வழிகளிலும் முயற்சிசெய்தலும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய தவறை அல்லது தவறுகளை இணக்கஞ்செய்வதற்குக் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்வார்களெனில், நீதிபதியானவர் வேறேதேனும் சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், அவர்கள் அவ்வாறு இணக்கஞ்செய்வதை அனுமதித்தல் வேண்டும்; அத்துடன் வழக்கு எந்த நியதிகளின் மீது இணக்கஞ் செய்யப்பட்டதோ அந்த நியதிகளை நீதிபதி எழுத்தில் குறித்தல்வேண்டும்; அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய நியதிகளுக்கு இணங்கியொழுகிய பின்னர் அந்நிகழ்வினைப் பதிதல்வேண்டும் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தலும் வேண்டும்.

(2) கட்சிக்காரர்கள் வழக்கை இணக்கஞ் செய்வதற்கு மறுப்பார்களெனின், நீதிபதி வழக்கை விளங்குவதற்கு முற்படல் வேண்டும்.

சட்டத்தரணியைப் பிரதிநிதியாக வைத்திருத்தல்.

32. குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வோர் ஆளும் அத்துடன் ஒவ்வொரு முறைப்பாட்டாளரும், சட்டத்தரணியொருவரைப் பிரதிநிதியாக வைத்திருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தமது உத்தியோக முறையில் முறைப்பாடொன்றைக் கோப்பிட்டுள்ளவரான பகிரங்க அலுவலர் ஒருவர், சட்டத்துறைத் தலைமையதிபதியை அல்லது அரச வழக்குரைஞர் ஒருவரை அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் சிறப்பாகவோ பொதுவாகவோ அதிகாரமளிக்கப்பட்ட சட்டத்தரணியொருவரைத் தமது பிரதிநிதியாக வைத்திருப்பதற்கு உரித்துடையவராவார்; ஆனால் அத்தகைய பிரதிநிதி எவரும் இல்லாதவிடத்து, பகிரங்க அலுவலர் தாமாகவோ அல்லது அக்குற்றவழக்கில் அக்கறை கொண்டுள்ளவரான திணைக்களத்தின் வேறு எவரேனும் பகிரங்க அலுவலரோ அல்லது நீதிமன்றத்தின் அனுமதியோடு சட்டத்தரணி ஒருவரோ குற்றவழக்குத் தொடுப்பை நடாத்தலாம்:

ஆயின், மேலும், மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச் சபை அக்கறைகொண்டுள்ள ஏதேனும் வழக்கில், ஏதேனும் மாநகரசபையின், நகரசபையின், பட்டினசபையின் அல்லது கிராமச் சபையின் அலுவலர் ஒருவர் தாமாகவோ அல்லது சட்டத்தரணியொருவர் மூலமாகவோ குற்றவழக்குத் தொடுப்பை நடாத்துவதற்கெனத் தோற்றலாம்.

விளக்கத்தின் போதான நடவடிக்கை முறை.

33. (1) நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் விளக்கங்களுக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் ஆரம்ப நீதிமன்றமொன்றில் விளக்கம் நடாத்தப்படல் வேண்டும்.

(2) ஆரம்ப நீதிமன்றமொன்றின் தீர்ப்பு ஒவ்வொன்றிற்கும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 279 ஆம், 283 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளும், ஆரம்ப நீதிமன்றமொன்றினால் அளிக்கப்படும் தண்டனைத் தீர்ப்பு ஒவ்வொன்றிற்கும் அச்சட்டத்தின் 289 ஆம், 290 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆவணங்களையும் காண்பிபொருள்களையும் கையாளுதல்.

34. (1) விளக்கத்தின் எக்கட்டத்திலாயினும், ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னிலையில் காண்பிக்கப்படும் ஏதேனும் ஆவணத்தின் அல்லது வேறு ஆதனத்தின் கையாளுகைக்காகப் பொருத்தமானதென அந்த நீதிமன்றம் எண்ணுகின்றவாறன அத்தகைய கட்டளையை அந்த நீதிமன்றம் ஆக்கலாம்.

மேன்முறையீடு முடிவடையும் வரையில் கையாளுவதற்கான கட்டளை நிறுத்திவைக்கப்படுதல்.

(2) மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள வழக்கொன்றில், (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படும்போது, அத்தகைய கட்டளையானது, (ஆதனம் பண்ணைவிலங்காக அல்லது விரைவாகவும் இயல்பாகவும் சிதைவதற்கு அமைவானதாக இருக்கும்போது தவிர) அத்தகைய மேன்முறையீட்டைச் சமர்ப்பிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட காலம் கழியும் வரையில், அல்லது அத்தகைய காலத்துக்குள் அத்தகைய மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோது அத்தகைய மேன்முறையீடு கையாளப்படும் வரையில், நிறைவேற்றப்படுதல் ஆகாது.

தவறு புரியப்பட்ட இடத்தைப் பார்வையிடல்.

35. ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, கட்சிக்காரர்கள் நீதிமன்றத்தில் தோன்றியதன்பின்னர் எக்கட்டத்திலாயினும், அவசியமென அவர் கருதுவாரெனின், தவறு புரியப்பட்ட இடத்தை அல்லது எந்த ஆதனம் தொடர்பில் தவறு புரியப்பட்டதெனச் சார்த்தப்படுகின்றதோ அந்த ஆதனத்தைப் பார்வையிடும் சந்தர்ப்பமொன்று அவருக்குக்கிட்டும் வரையில் விளக்கத்தின் விசாரணையை ஒத்திவைக்கலாம். அவ்வாறு பார்வையிடும் நேரமும் இடமும் பற்றிய அறிவித்தல் நீதிபதியால் கட்சிக்காரர்களுக்கு உரியமுறையில் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அக்கட்சிக்காரர்கள் பார்வையிடுகையின்போது சமூகமாயிருப்பதற்கு உரித்துடையவர்கள் என்பதை அத்தகைய அறிவித்தல் கூறுதலும் வேண்டும்.

நீதிபதி வருகை தராதிருத்தல்.

36. ஓர் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, பதிற்கடமையாற்றும் நீதிபதியொருவருக்கான ஒழுங்குகளைச் செய்யாமல் வருகை தராதிருக்கும் சந்தருப்பத்தில், நீதிபதி வருகைதராதிருக்கும் காலத்தின்போது அந் நீதிமன்றத்தின் முன்னிலையில் அழைக்க நிருணயிக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய எல்லா வழக்குகளையும், அவை இப்பாகத்தின் கீழ் அல்லது IV ஆம் பாகத்தின்கீழ் தொடுக்கப்பட்டிருப்பினுஞ்சரி, அழைப்பித்து வேறொரு தேதிக்குப் பின்போடுவதற்கு நீதிமன்றப் பதிவாளர் ஆற்றலுடையவராதல் வேண்டும்.

## பாகம் IV

### குடியியல் வழக்குகளைத் தொடுக்கும் மாதிரி பற்றி

வழக்குகளைத் தொடுத்தல்.

37. எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள் வழக்காளி அல்லது எதிராளி வதிகின்றாரோ, அல்லது இரு அல்லது இருவருக்கு மேற்பட்ட வழக்காளிகள் அல்லது எதிராளிகள் உள்ளவிடத்து அவர்களில் எவரேனும் ஒருவர் வதிகின்றாரோ, அந்த நீதிமன்றத்தில். ஏதேனும் சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட பணவகையான வரையறைகளுக்கு அல்லது வேறு வரையறைகளுக்கு அமைய, வழக்குத் தொடுக்கப்படுதல் வேண்டும்.

38. சாதாரணமாகவும் சுருக்கமான மொழியிலும் எழுதப்பட்டதும் வழக்காளியினால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்டதுமான எழுத்திலான கூற்று ஒன்றினை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதன்மூலம் அல்லது நீதிமன்றத்துக்கு அனுப்பிவைப்பதன்மூலம் வழக்கு ஒன்று ஆரம்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படலாம் அல்லது வழக்காளி அவரது வழக்கை அத்தகைய நீதிமன்ற பதிவாளரிடம் வாய்மொழிமூலம் கூறலாம்; பதிவாளர் அதனை எழுத்தில் இட்டு அதில் வழக்காளியின் கையொப்பத்தையும் பெறுதல் வேண்டும் அல்லது எழுத்தில் இடுவித்துக் கையொப்பத்தைப் பெறுவித்தலும் வேண்டும். அவ்வாறு எழுத்தில் இடப்பட்ட கூற்று அல்லது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட கூற்று, வழக்கில் பிராது எனக் கருதப்படுதல் வேண்டும். பிராதைக் கோப்பிடுதல்.

39. ஓர் ஆரம்ப நீதிமன்றத்திலான வழக்குரைகள் கீழ்க்கண்டவற்றுக்கு மட்டும் எல்லைப்படுத்தப்படுதல் வேண்டும் :— வழக்குரைகள்.

(அ) வழக்காளியின் பிராது ;

(ஆ) எதிராளியின் மறுமொழியும் எதிர்க்கோரிக்கை ஏதேனுமிருப்பின் அதுவும் ;

(இ) எதிராளியின் எதிர்க்கோரிக்கைக்கு வழக்காளி கொடுக்கும் மறுமொழி.

ஆனால், எதிர்க்கோரிக்கை எதுவும் இல்லாதவிடத்து, மறுமொழிக்கப்பால் மேலும் எந்தவித வழக்குரையும் இருத்தலாகாது.

40. பிராதானது கட்சிக்காரர்களின் பெயர்கள், வதிவிடங்கள் ஆகியவற்றையும், அது கோப்பிடப்படும் தேதியையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அது எத்தனையாவதாகக் கோப்பிடப்பட்டது என்பதற்கான இலக்கத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும். பிராதுகளுக்கு இலக்கம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

41. வழக்காளி, வழக்குக் காரணங்கள் எல்லாம் கீழ்க்கண்டவாறு எழுவனவாயிருப்பின், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வழக்குக் காரணங்களை ஒரே பிராதில் ஒன்றுக்கலாம் ; அதாவது வழக்குக் காரணங்கள் எல்லாம்— எத்தகைய வழக்குக்காரணங்கள் இணைக்கப்படலாம் என்பது.

(அ) ஒரே வழக்குவிடயத்துடன் தொடர்புபட்ட ஒரே செயற்கோவையிலிருந்து அல்லது செயற்கோவைகளிலிருந்து எழுவனவாயிருப்பின் ; அல்லது

(ஆ) ஒரே எதிராளிக்கெதிரானவையாக அல்லது ஒரே எதிராளிகளுக்கெதிரானவையாக இருப்பின்.

ஆனால், அவ்வாறு ஒன்றுக்கப்பட்ட வழக்குக் காரணங்கள் எல்லாம் ஒன்றோடொன்று ஒத்துப்போவனவாயும் ஒரேவிதமான நிவாரணத்தைப் பெறுவதற்கு, வழக்காளிக்கு உரித்தளிப்பனவாயும், எல்லாக் கட்சிக்காரரையும் சம்பந்தப்படுத்துவனவாயும் இருப்பதாகப் பிராதின் முகப்பிலிருந்து தோன்றுதல் வேண்டும்.

42. மேற்கூறியவாறு அத்தகைய பிராது கோப்பிடப்பட்டவுடனும், ஆரம்ப நீதிமன்றம், எதிராளி தோன்றுவதற்கான ஒரு நாளை நியமித்தல் வேண்டுமென்பதோடு, அதைப்பற்றி வழக்காளிக்கு அறிவித்தலும் வேண்டும்; அத்துடன் எதிராளி தோன்றவேண்டுமென்றுகூறும் அழைப்புக்கட்டளையைப் பிறப்பித்தலும் வேண்டும். அழைப்புக் கட்டளைகளைப் பிறப்பித்தல்.

## தோன்றியதன் பின்னரான நடவடிக்கைகள்

எதிராளி தோன்றி கோரிக்கையை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும் அல்லது மறுத்துரைத்தல் வேண்டும்.

**43.** (1) எதிராளியானவர், அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடத்திலும் நாளிலும் வழக்காளியின் கோரிக்கையை ஒப்புக்கொள்கின்றாரா அல்லது மறுத்துரைக்கின்றாரா என்று கேட்கப்படுதல் வேண்டும்.

கோரிக்கையை எதிராளி ஒப்புக்கொண்டால்.

(2) எதிராளி கோரிக்கையை ஒப்புக்கொண்டால் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அத்தகைய ஒப்புக்கோடலைப் பதிவேட்டில் பதிதல்வேண்டும் என்பதோடு, அப்பதிவேட்டில் கையொப்பமிடுமாறு எதிராளியைத் தேவைப்படுத்தலும் வேண்டும்; அத்துடன் வழக்காளிக்குச் சார்பாகத் தீர்ப்பு எழுதுதலும் வேண்டும் :

ஆயின், நீதிமன்றத்துக்கு வருகைதரமுடியாதிருக்கும் எதிராளி ஒருவர் அவருக்கு அறிமுகமான சட்டத்தரணி ஒருவரின் முன்னிலையில் தம்மால் கையொப்பமிடப்பட்டு அந்தச் சட்டத்தரணியால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது ஒப்புக்கோடலை அந்த நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஒப்புக்கோடல் கிடைக்கப்பெற்றுப் பதியப்பட்டதன் மேல், நீதிபதி அதற்கிணங்க வழக்காளி சார்பில் தீர்ப்பெழுதுதல் வேண்டும்.

கோரிக்கையை எதிராளி மறுத்துரைத்தால்.

(3) கோரிக்கையை எதிராளி மறுத்துரைத்தால் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, விளக்கத்துக்கு முன்னரான ஒரு கேட்புக்காக அந்த வழக்கைக் கூப்பிடுவதற்கான ஒரு தேதியை நிர்ணயித்தல்வேண்டும்.

(4) விளக்கத்துக்கு முன்னரான கேட்புக்கென நிர்ணயிக்கப்பட்ட நாளன்று ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அந்தக் கட்சிக்காரரிடையே இணக்கத்தை ஏற்படுத்திப் பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கான சட்டமுறையான எல்லா வழிவகைகளையும் முயன்றுபார்த்தல் வேண்டும்.

கட்சிக்காரரைச் சோதனை செய்தல்.

**44.** (1) நடவடிக்கைகளின் இந்தக் கட்டத்தின்போது ஆரம்ப நீதிமன்ற நீதிபதி பின்வரும் நோக்கங்களுக்காகக் கட்சிக்காரரை வாய்மொழி மூலம் சோதனைசெய்யலாம் :—

(i) அவர்களுக்கிடையே பிணக்கிலுள்ள விடயங்களை நிச்சயித்தலும் தேவையில்லாத எவையேனும் சான்றுகளை ஒதுக்குதலும், அத்துடன்

(ii) அவர்களுக்கிடையேயான உடன்பாடின்மைக்கான காரணத்தை அகற்றி அவர்களை இணக்கிவைத்து சமரசத் தீர்வொன்றுக்கு வருமாறு அவர்களை ஊக்குதல்.

(2) கட்சிக்காரரை இணக்கிவைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சட்டமுறையான முயற்சி ஒவ்வொன்றும் பயனற்றுப்போனால், நீதிமன்றம், எதிராளி அவரது மறுமொழியைக் கோப்பிடுவதற்கான தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும். மறுமொழியானது 38 ஆம் பிரிவில் காட்டப்பட்ட முறையில் ஏற்றமாற்றங்களுடன் கோப்பிடப்படுதல் வேண்டும்.

45. எதிராளி தமது மறுமொழியோடு சேர்த்து எதிர்க் கோரிக்கை யொன்றையும் விடுத்தால், அந்த எதிர்க்கோரிக்கையை ஒப்புக்கொள்கிறாரா அல்லது மறுத்துரைக்கிறாரா என்பதைக் கூறுமாறு வழக்காளி கேட்கப்படுதல் வேண்டும். வழக்காளி எதிர்க்கோரிக்கையை மறுத்துரைத்தால் அந்த எதிர்க்கோரிக்கைக்கான மறுமொழியை உடனடியாகக் கூறுமாறு அல்லது நீதிமன்றம் நிர்ணயிக்கக்கூடிய அத்தகைய மேலதிகக் காலத்தினுள் கூறுமாறு வழக்காளி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், எதிராளியின் எதிர்க்கோரிக்கைக்கு வழக்காளி கொடுக்கும் மறுமொழிக்கு அவ்வேற்பாடுகள் ஏற்புடையனவாகின்ற வரைக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் : எதிர்க் கோரிக்கை பற்றி.

ஆயின், வழக்காளியானவர் அவரது மறுமொழியில், புதிய ஒரு வழக்குக் காரணமாக அமையக்கூடிய புதிய கருமம் எதையும் (அக்கருமத்தை அவ்வழக்காளி அவரது ஆரம்பப் பிராதிலேயே எடுத்துக் கூறக் கூடியதாய் இருந்திருக்குமாயின்) புதிதாக முன்வைத்தலாகாது. எதிர்க் கோரிக்கைக் கான மறுமொழி பற்றி.

46. மறுமொழி கோப்பிடப்பட்டபின்னர் அல்லது மறுமொழி எதிர்க் கோரிக்கை பற்றிப் பேசுமாயின், அதற்கான வழக்காளியின் மறுமொழி (ஏதேனுமிருப்பின்) கோப்பிடப்பட்ட பின்னர், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அந்த வழக்கின் விளக்கத்துக்கான தேதியை நிர்ணயித்தல் வேண்டும். வழக்கின் விளக்கத் துக்கான தேதியை நிர்ணயித்தல்.

47. வழக்குரையில் காணப்படும் ஒரு சார்த்தலுக்கும் எண்பிப்புக்கும் இடையிலான ஒரு வேறுபாடு, அத்தகைய எண்பிப்பு, புதிய வழக்குக் காரணம் ஒன்றிருப்பதாக வெளிக்காட்டினுல் ஒழிய, அல்லது எதிர்க் கட்சிக்காரர் அத்தகைய வேறுபாடு காரணமாக அவருக்குப் பாதகம் விளையும் வண்ணம் பிழைவழி உய்க்கப்பட்டாரென நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய, முக்கியமற்றதெனப் புறக்கணிக்கப்படுதல் வேண்டும். முக்கியமில்லா வேறுபாடுகள் புறக்கணிக் கப்படுதல் வேண்டும்.

48. வழக்கொன்றுக்கான அல்லது நடவடிக்கையொன்றுக்கான கட்சிக்காரர் ஒவ்வொருவரும் சட்டப் பிரதிநிதி ஒருவரை வைத்திருக்க உரித்துடையவராதல் வேண்டும். சட்டப் பிரதி நிதியை வைத் திருக்கலாம்.

49. கட்சிக்காரரைக் கேள்வி கேட்டு அவர்கள் எந்தெந்தக் கருமங்கள் பற்றி வேறுபாடுடையவர்களாக இருக்கின்றனர் என்பதை நிச்சயித்த பின்னர், வழக்கில் சரியான முடிவை எடுப்பது எந்த வழக்கெழு வினக்களில் தங்கியிருப்பதாகத் தோன்றுகின்றதோ அந்த வழக்கெழு வினக்களை, நீதிமன்றம் விளக்கத்தின்போது வகுத்தமைத்தல் வேண்டும். வழக்கெழு வினக்கள் வழக்குரைகளுடன் கண்டிப்பாக ஒத்திருக்கவேண்டுமென்பதில்லை; அத்துடன் வழக்கெழு வினக்களில் புதிய பிரச்சினைகள் எழுப்பப்படுவதன் விளைவாக அவசியமேற்பட்டால் எதிர்க்கட்சிக்காரருக்காக வழக்கை ஒத்திவைப்பதை நீதிமன்றம் அனுமதிக்கலாம்; ஆனல் வழக்குரைகளைத் திருத்த அனுமதித்தல் ஆகாது. வழக்கெழு வினக்களை வகுத்தமைத் தல்.

50. (1) விளக்கமானது மாவட்ட நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட கிரமமுறை வழக்குகளுக்கான விளக்கத்துக்கெனக் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் விதித்துரைத்த மாதிரியாக நடாத்தப்படுதல் வேண்டும். விளக்கத்தின் போதான நடவடிக்கை முறை.

(2) தீர்ப்புக்கள், தீர்வைகள், தீர்வைகளை நிறைவேற்றி வைத்தல் ஆகியவை தொடர்பிலான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், ஆரம்ப நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்களுக்கும் தீர்வைகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

எதிர்க் கோரிக்கை.

51. ஏதேனும் ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் நடவடிக்கையில் எதிராளியினால் கொடுக்கப்படும் எதிர்காப்பில் அல்லது எதிர்க் கோரிக்கையில் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்ட கருமம் அடங்கியுள்ளவிடத்து, அத்தகைய எதிர்காப்பு அல்லது எதிர்க் கோரிக்கை, பிணக்கிலுள்ள அந்தக் கருமத்தை (அது வழக்காளியின் கோரிக்கையையும் அந்தக் கோரிக்கைக்கான எதிர்காப்பையும் பற்றியதாக உள்ள அந்த அளவுக்கு) நீதிமன்றம் முடிவுசெய்வதற்கு அந்நீதிமன்றத்திற்கிருக்கும் ஆற்றலை அல்லது கடமையைப் பாதித்தல் ஆகாது; எந்த நிவாரணத்தை வழங்குவதற்கு அந்த நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இருக்கின்றதோ அந்த நிவாரணத்துக்கு மேற்பட்ட நிவாரணம் எதையும் அத்தகைய ஏதேனும் எதிர்க்கோரிக்கையின்மீது எதிராளிக்கு அளித்தலாகாது:

ஆயின், எப்பொழுதும், அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய நடவடிக்கைகளில் எவரேனும் கட்சிக்காரர் விண்ணப்பித்தால், அந்த வழக்கை, அது தொடுக்கப்பட்டிருக்கும் நீதிமன்றத்திலிருந்து பிணக்கிலுள்ள முழுக் கருமத்தின்மீதும் நியாயாதிக்கம் கொண்டிருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றும்படி பணித்தல் (அவ்வாறு செய்தல் தக்கதென நினைக்கப்படுமாயின்) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது அதன் எவரேனும் நீதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அந்த வழக்கின் பதிவேட்டைக் கட்டளையில் குறித்துரைக்கப்படும் மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதோடு, அந்த நடவடிக்கையானது ஆரம்பத்திலேயே அந்த மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தது என்றாற்போன்று தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

சாட்சிக்காரரைக் கட்டளை விட்டழைப்பதற்கும், பிடியாணை பிறப்பிப்பதற்குமான தத்துவம்.

52. (1) ஆரம்ப நீதிமன்றம், அதனால் விளங்கப்படுகின்ற அல்லது கேட்கப்படுகின்ற வழக்குகள் பற்றி எல்லாச் சாட்சிக்காரர்களையும் கட்டளைவிட்டழைப்பதற்கும் அவர்களைச் சோதனைசெய்வதற்கும் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அவசியம் ஏற்படின் எவரேனும் கட்சிக்காரரை அல்லது சாட்சிக்காரரைக் கைதுசெய்து அதன் முன்னர் நிறுத்துவதற்கான பிடியாணைகளைப் பிறப்பிப்பதற்கும் அவர்களைச் சட்டப்படி கையாள்வதற்கும் நியாயாதிக்கம் கொண்டதாதலும் வேண்டும்.

அத்துடன், ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பியாமல் விடுவதை மன்னிக்கின்ற ஏதேனும் தடை, அல்லது சிறப்புரிமை, அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் இருந்தாற்றவிர, அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை அதன்முன்னர் காண்பிக்குமாறு அல்லது காண்பிக்கச் செய்யுமாறு எவரேனும் கட்சிக்காரருக்கு அல்லது சாட்சிக்காரருக்கு அல்லது வேறு ஆளுக்குக் கட்டளை இடுவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளைகள், பிடியாணைகள் பற்றியனவான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழும் 42 ஆம் பிரிவின்கீழும் பிறப்பிக்கப்பட்ட அழைப்புக்கட்டளைகள், பிடியாணைகள் ஆகியவற்றுக்கும் இயன்றவரை ஏற்புடையனவாதல் வேண்டும்.

## தோன்றத் தவறுதல் பற்றி

53. (1) அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது வழக்கைக் கேட்கவென நிர்ணயிக்கப்பட்ட ஏதேனும் நாளன்று வழக்காளி தோன்றாவிட்டால் அல்லது தோன்றாமைக்குப் போதிய காரணம் காட்டாவிட்டால், வழக்காளியின் வழக்கைத் தள்ளுபடி செய்யலாம் : வழக்காளி தோன்றத் தவறுவதன் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்.

ஆயின், எதிராளி நீதிமன்றத்தில் தோன்றி 43 ஆம் பிரிவின்கீழ் கேட்கப்பட்டதன் பேரில் வழக்காளியின் கோரிக்கையை ஒப்புக்கொண்டால், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி சட்டத்துக்கிணங்க வழக்காளி சார்பில் தீர்ப்பு எழுதுதல் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று அல்லது வழக்கைக் கேட்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட வேறேதேனும் நாளன்று வழக்காளி தோன்றியும் எதிராளி தோன்றாவிட்டால் அல்லது தோன்றாமைக்குப் போதிய காரணம் காட்டாவிட்டால், அவரைத் தோன்றும்படி பணிக்கின்ற அழைப்புக்கட்டளை, அறிவித்தல் அல்லது கட்டளை அந்த எதிராளியிடம் சேர்ப்பிக்கப்பட்டது என்று முறையாக எண்பிக்கப்பட்டதன்மேல் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எதிராளிக்கெதிராகத் தவறுகையினால் விளை தீர்ப்பை எழுதலாம். எதிராளி தோன்றத் தவறுவதன் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கை.

(3) எதிராளியானவர் அத்தகைய தீர்ப்புக்குப் பின்னர் நியாயமான காலத்துக்குள் வழக்காளிக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, விபத்தினால், துர்ப்பாக்கியத்தால், அல்லது வேறு தவிர்க்கொணாக்காரணத்தினால், அல்லது நடவடிக்கைகள் பற்றிப் போதியளவு தகவலைப் பெறாமையினால், உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் தோன்றமுடியாதவாறு தாம் தடுக்கப்பட்டார் என்றும், அழைப்புக்கட்டளையோ, அறிவித்தலோ சேர்ப்பிக்கப்படுதலைத் தட்டிக்கழிக்கும் நோக்கத்துக்காகத் தாம் அவ்வாறு வராதிருக்கவில்லை என்றும், அந்த வழக்கின் குற்றநற்றுக்களைக்கொண்டு தமக்கு நல்ல செல்லுபடியான எதிர்காப்பு உண்டென்றும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியைச் சத்தியக்கடுதாசியின்மூலமோ வேறுவகையாகவோ திருப்திப்படுத்தினால், அந்த நீதிபதி அத்தகைய தீர்ப்பையும் அத்தீர்ப்பின்மீதான ஏதேனும் நடவடிக்கையையும் தள்ளிவைக்கலாம் என்பதுடன், தக்கதென நீதிபதி கருதும் அத்தகைய நியதிகளின்மீது எதிராளி அவரது எதிர்காப்பை எடுத்துரைக்க அவரை அனுமதிக்கலாம். தவறுகையினால் விளைதீர்ப்பு குறித்த சில விடயங்களில் மீளவும் சீர்தூக்கிப் பார்க்கப்படலாம்.

(4) அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று அல்லது வழக்கைக் கேட்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நாளன்று வழக்கைக் கூப்பிடும்போது எந்தக் கட்சிக்காரருமே தோன்றாதுவிட்டால், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி வழக்காளியின் வழக்கைத் தள்ளுபடிசெய்து, வழக்குச் செலவுத்தொகையெதுவும் வழங்காமல் தீர்ப்பெழுதல் வேண்டும். வழக்காளி, எதிராளி இருவருமே வராவிட்டால் வழக்கைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

(5) வழக்கொன்று (1) ஆம் உட்பிரிவின் அல்லது (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், வழக்காளி எதிராளிக்கு அறிவித்தல் கொடுத்தபின்னர், தாம் விபத்தினால், துர்ப்பாக்கியத்தால் அல்லது வேறு தவிர்க்கொணாக் காரணத்தால் நீதிமன்றத்தில் தோன்றமுடியாதவாறு தடுக்கப்பட்டாரென்று சத்தியக் கடுதாசியின் மூலம் அல்லது வேறு வகையில் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியைத் திருப்திப்படுத்தினால், அந்த நீதிபதி, அந்த நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய நியதிகளின்மீது புதியதொரு வழக்கைத் தொடுப்பதற் புதிய வழக்கொன்றைத் தொடுப்பதற்கு வழக்காளிக்கு அனுமதி வழங்கப்படலாம்.

கான அனுமதியை வழக்காளிக்கு வழங்கலாம். அனுமதி அவ்வாறு வழங் கப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ்த் தள்ளுபடிசெய்யப்பட்ட வழக்கு, புதிய வழக்கொன்றைத் தொடுப்ப தற்குத் தடையாகத் தொழிற்படுதல் ஆகாது.

தவறுகை யினால் விளை தீர்ப்புக் கெதிராக அல்லது கட் டளைக்கெதி ராக மேன் முறையீடு செய்யமுடி யாது என்பது.

(6) இந்தச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணுக ஏது எவ்விதமிருப்பினும், தோன்றத்தவறியமை காரணமாக இந்தப் பிரிவின்கீழ் எழுதப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதி ராக மேன்முறையீடு எதுவும் இருத்தலாகாது.

## பாகம் V

### ஆரம்ப நீதிமன்றங்களிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள்

மேன்முறை யீடுகள்.

**54.** (1) நான்காம் உட்பிரிவுக்கமைய, ஆரம்ப நீதிமன்றத்தின் தீர்ப் புக்கு, குற்றத்தீர்ப்புக்கு, தண்டனைத்தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது இறு திக்கட்டளைக்கு எதிராகச் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீடும், (5) ஆம் உட்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிர, அத்தகைய தீர்ப்பு, குற்றத்தீர்ப்பு, தண்டனைத்தீர்ப்பு, தீர்வை, அல்லது இறுதிக்கட்டளை எழுதப்பட்ட தேதியிலிருந்து பதினன்கு நாட் களுக்குள் மனுவொன்றை ஆரம்ப நீதிமன்ற நீதிபதியிடம் சமர்ப்பிப்பதன் மூலம், செய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய மேன்முறையீட்டு மனு எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதோடு, மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைச் சுருக்காமல் எடுத் துக்கூறுதலும் வேண்டும்; அத்துடன் மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது சட்டத்தரணியால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு மேன்முறையீட்டு மனுவும், ஐந்து ரூபாப் பெறுமதி கொண்ட முத்திரையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; ஆனால் மேன்முறையீட்டாளர் சட்டத்துறைத் தலைமையதிபதியாக இருப் பின் அத்தகைய முத்திரை அவசியமாகாது.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி வற்புறுத்தினுலொழிய, அல்லது எழுத்திலான அவரது சம்மதம் இருந்தாலொழிய, ஆரம்ப நீதிமன்ற நீதி பதியொருவரால் அளிக்கப்பட்ட விடுதலைத் தீர்ப்புக்கெதிராக மேன்முறை யீடு எதுவும் இருத்தலாகாது.

(5) ஏதேனும் குற்றவியல் வழக்கில் அல்லது கருமத்தில் ஆரம்ப நீதி மன்றத்தால் எடுத்துமொழியப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு, தண்டனைத் தீர்ப்புக்கு அல்லது இறுதிக்கட்டளைக்கெதிராகச் சட்டத்துறைத் தலைமை யதிபதி மேன்முறையீடு செய்கின்றவிடத்து, அல்லது அந்த மேன் முறையீடானது விடுதலைத் தீர்ப்புக்கு எதிராகச் சட்டத்துறைத் தலைமை யதிபதியின் சம்மதத்துடன் செய்யப்படுகின்ற மேன்முறையீடாக இருக் கின்றவிடத்து, அந்தத் தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது இறுதிக் கட்டளையை எழுதிய தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குள் மேன் முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும்.

55. (1) ஆரம்ப நீதிமன்ற நீதிபதி மேன்முறையீட்டு மனுவின் முகப்பில் அம்மனு எந்தத் தேதியன்று பெறப்பட்டது என்பதை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும் என்பதோடு, முத்திரையின்மீது கீறிக் கையொப்பமிடுதலும் வேண்டும்; அத்துடன் அம்மேன்முறையீட்டு மனுவை சுணக்கம் இல்லாமல் வழக்கின் பதிவேடுகளுடன் சேர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மேன்முறையீடு கிடைத்ததன்மேல் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

(2) மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்பை, குற்றத்தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது இறுதித்தீர்ப்பைப் பின்பற்றி மேன்முறையீட்டாளர் மறியலுக்கனுப்பப்பட்டிருப்பின், அவர், அவரது மேன்முறையீட்டைச் சமர்ப்பித்தவுடன், அவருக்கறிவிக்கப்படும் ஏதேனும் தேதியில் ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவதற்காகப் பிணையில் விடுவிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அவர் மேன்முறையீட்டில் வழங்கப்படும் கட்டளையை அனுசரித்தலும் வேண்டும். கொடுக்குமாறு கட்டளையிடப்பட்ட பிணையைக் கொடுப்பதற்கு அந்த மேன்முறையீட்டாளர் தவறினால் அவர், மறியற்சாலைக் கண்காணிப்பாளரின் கட்டுக்காவலில் விளக்கமறியலில் வைக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படலாம்.

56. (1) மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் வழக்குப் பதிவேட்டைப் பெற்றதும், மேன்முறையீட்டுக்கு ஓர் இலக்கம் கொடுத்தல் வேண்டும் என்பதோடு, அந்த மேன்முறையீட்டைப் பதிவுசெய்தலும் வேண்டும்; அத்துடன் வழக்குப் பதிவேட்டினதும் மேன்முறையீட்டு மனுவினதும் போதியளவு பிரதிகளைத் தயாரிப்பித்தல் வேண்டும். அதன் பின்னர், மேன்முறையீடானது, மேன்முறையீடுகள் பற்றிய நிரலில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒருநாளில் கேட்கப்படுதலும் வேண்டும்; அந்த நாள் எது என்பதுபற்றி மேன்முறையீட்டாளருக்கும் ஏனைய கட்சிக்காரர்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு மாதகால அறிவித்தலாவது கொடுக்கப்படுதல் வேண்டும். மேன்முறையீட்டு வழக்கேடுகளைத் தயாரித்தல்.

(2) நூறு சொற்கள் கொண்ட ஒவ்வொரு பக்கத்துக்கும் இருபத்தைந்து சதம் என்ற விகிதத்தில் பணத்தைச் செலுத்தியதன்மேல் வழக்குப் பதிவேடு, மேன்முறையீட்டு மனு ஆகியவற்றின் பிரதியொன்றைப் பெறுவதற்கு மேன்முறையீட்டுக் கட்சிக்காரர்கள் உரித்துடையவர்களாதல் வேண்டும்:

ஆயின், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கான அத்தகைய வழக்குப் பதிவேடு, மேன்முறையீட்டு மனு ஆகியவற்றின் பிரதி, கட்டணமேதுமின்றி அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

57. (1) கேட்பின்போது அங்கே தோன்றுவதற்கு அல்லது அவரவர்க்கான சட்டத்தரணிமாரை பிரதிநிதிகளாக வைத்திருப்பதற்கு எல்லாக் கட்சிக்காரர்களும் உரித்துடையவர்களாதல் வேண்டும். மேன்முறையீட்டைக் கேட்டல்.

(2) மேன்முறையீடானது கேட்புக்கு வரும்போது மேன்முறையீட்டாளர் சமுகமாயிருப்பின் அவர், தமது மேன்முறையீட்டுக்கு ஆதாரமாகக் கூறுவதை முதற்கண் கேட்டல் வேண்டும். அதன்பின்னர் எதிர்வாதி, சமுகமாயிருப்பின் மேன்முறையீட்டாளர் கூறியதற்கெதிரானதாகக் கூறுவதைக் கேட்டல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டாளர் தமது மேன்முறையீட்டுக்கு ஆதரவளிப்பதற்கெனத் தோன்றுதிருப்பின், மேன்முறையீட்டு நீதிமன்றம் மேன்முறையீட்டைச் சீர்தூக்கிப்பார்த்து, அது தக்கதென நினைக்கும் அத்தகைய கட்டளையை அம்மேன்முறையீடு தொடர்பில் ஆக்கலாம்.

மேன்முறையீடுகள் மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் கொண்டிருக்கும் தத்துவங்கள்.

58. மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருவனவற்றைச் செய்யலாம் :—

(அ) குற்றவியல் வழக்கில்—

(i) எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்பை, குற்றத் தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது இறுதிக்கட்டளையை உறுதிப்படுத்தி மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம் ; அல்லது

(ii) மேன்முறையீட்டை அனுமதித்து தீர்ப்பை, குற்றத்தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது இறுதிக்கட்டளையைத் தள்ளிவைக்கலாம் என்பதோடு, புதிய விளக்கம் ஒன்றை நடாத்துமாறு கட்டளையிடலாம் அல்லது மேன்முறையீட்டாளரை விடுதலைசெய்யலாம் அல்லது தோதானதாயிருக்கக்கூடிய வேறேதேனும் கட்டளையை ஆக்கலாம் ; அல்லது

(iii) எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்பை, குற்றத் தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது இறுதிக்கட்டளையை வேறுபடுத்தலாம் அல்லது தண்டனைத்தீர்ப்பைக் குறைக்கலாம் அல்லது அதன் இயல்பைக் கடுமையாக்கலாம் ; தண்டனைத்தீர்ப்பு கடுமையாக்கப்படுகின்றவிடத்து அந்தத் தண்டனைத்தீர்ப்பு ஆரம்ப நீதிமன்றம் விதிக்கக் கூடிய தண்டனைத்தீர்ப்பை விஞ்சுதலாகாது ; அல்லது

(iv) மேன்முறையீடானது விடுதலைக் கட்டளைக்கெதிரான தொன்றாக இருக்கின்றவிடத்து அத்தகைய கட்டளையை நேர்மாறாக்கி புதியதொரு விளக்கத்தை நடாத்தும்படிப் பணிக்கலாம் ;

(ஆ) குடியியல் வழக்கில்—

(i) தீர்ப்பை, தீர்வையை, அல்லது கட்டளையை உறுதிப்படுத்தி மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம் ; அல்லது

(ii) மேன்முறையீட்டை அனுமதித்து தீர்ப்பை, தீர்வையை, அல்லது கட்டளையைத் தள்ளிவைக்கலாம் ; அல்லது

(iii) தீர்ப்பை, தீர்வையை, அல்லது கட்டளையை வேறுபடுத்தலாம் ; அல்லது

(iv) நியாயமானதென நீதிமன்றத்துக்குத் தோன்றும் ஒரு தொகையைக் கொண்ட செலவுத்தொகையைக் கொடுக்குமாறு கட்டளையிடலாம்.

மேன்முறையீட்டுத் தீர்ப்பு, பகிரங்க நீதிமன்றத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

59. (1) மேன்முறையீட்டைக் கேட்டு முடித்ததும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உடனடியாக அல்லது அந்நோக்கத்துக்கென அப்போது அங்கேயே நியமிக்கப்படும் பிந்திய ஒரு தேதியில் தீர்ப்பைப் பகிரங்க நீதிமன்றத்தில் கூறுதல் வேண்டும்.

(2) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று தீர்ப்பை அளிப்பதற்கு நீதிமன்றம் தயாராக இல்லாவிடின் அந்த நோக்கத்துக்கென வேறொரு நாள் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு நீதிபதியினல் எழுதப்பட்டுக் கையொப்பமிடப்பட்டதும், ஆனல் இன்னமும் எடுத்துமொழியப்படாததுமான ஒரு தீர்ப்பை வேருெரு நீதிபதி எடுத்துமொழியலாம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஆரம்ப நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

60. (1) வழக்கொன்று மேன்முறையீட்டில் முடிவுசெய்யப்படுகின்றபோதெல்லாம் மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் கட்டளையை அதன் இலச்சினையின்கீழ் ஆரம்ப நீதிமன்றத்துக்கு அத்தாட்சிப்படுத்தி, ஆரம்ப நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டு மனுவையும் வழக்குப் பதிவேட்டையும் அந்தக் கட்டளைக்கான காரணங்களுடன் சேர்த்து அத்தகைய நீதிமன்றத்துக்குத் திருப்பி அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை எந்த ஆரம்ப நீதிமன்றத்துக்கு அத்தாட்சிப்படுத்தி அனுப்பிவைக்கப்படுகின்றதோ அந்த ஆரம்ப நீதிமன்றம், அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட அந்தக் கட்டளைக்கு இணங்கவுள்ள அத்தகைய கட்டளைகளை அதன்மேல் ஆக்குதல் வேண்டுமென்பதோடு, அவசியமானல் வழக்குப் பதிவேடும் அதற்கிணங்கத் திருத்தப்படுதல் வேண்டும்.

மேன்முறையீடுகள் தணிந்தற்றுப் போதல்.

61. ஒரு குற்றவியல் வழக்கில் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்ததன்மேல், இறுதியாகத் தணிந்தற்றுப்போதல் வேண்டும்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் பதிவேடுகளைத் தருவித்துக் கட்டளைகளை ஆக்கலாம்.

62. (1) மேன்முறையீட்டு நீதிமன்றம் தன்பாட்டிலேயே அல்லது இன்னலுற்ற எவரேனும் கட்சிக்காரரின் விண்ணப்பத்தின்பேரில், ஏதேனும் வழக்குத் தொடர்பில் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத்தீர்ப்பு அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை சட்டமுறையானதா அல்லது முறைமையானதா என அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் ஒழுங்காகச் செய்யப்பட்டனவா எனத் தன்னைத்தானே திருப்திப்படுத்தும் நோக்கத்துக்காக ஏதேனும் வழக்கின் (ஏலவே விளங்கப்பட்ட வழக்காயிருப்பினும்சரி அல்லது ஆரம்ப நீதிமன்றத்தில் முடிவுறுதிருக்கும் வழக்காயிருப்பினும் சரி) பதிவேட்டைத் தருவித்து அதனைச் சோதனையிடலாம்.

(2) அத்தகைய ஏதேனும் வழக்கில் 58 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளைகளுள் எவற்றையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆக்கலாம்.

(3) ஒரு குற்றவியல் வழக்கில் இந்தப் பிரிவின்கீழான ஒரு கட்டளையொன்றைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பாதகமாக (அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் தம்பக்க வழக்கைத் தாமாகவோ தனது சட்டத்தரணி மூலமாகவோ உரைப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலன்றி) ஆக்குதல் ஆகாது.

(4) இந்தப் பிரிவிலுள்ளது எதுவும் ஒரு விடுதலைத் தீர்ப்பை ஒரு குற்றத்தீர்ப்பாக மாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரமளிப்பதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(5) இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறு தவிர, மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கும்போது, கட்சிக்காரரொருவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னர் தாமாகவோ சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கு உரிமை எதுவும் உடையவராகார்.

ஆயின், நீதிமன்றமானது, தக்கதென அது நினைக்குமாயின், அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில் எவரேனும் கட்சிக்காரர் தாமே நேரடியாக அல்லது அவரது சட்டத்தரணி மூலம் கூறுவதைக் கேட்கலாம்.

(6) அறுபதாம் பிரிவின் ஏற்பாடுகள், மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆக்குகின்ற கட்டளைகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

காலத்தைக் கணக்கிடுதல்.

63. இப்பாகத்தின்கீழ் மேன்முறையீடு ஒன்று எந்தக் காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டுமோ அந்தக் காலப்பகுதியைக் கணக்கிடுவதில், எதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட தீர்ப்பு, தீர்வை, தண்டனைத்தீர்ப்பு, குற்றத்தீர்ப்பு அல்லது இறுதிக்கட்டளை எடுத்துமொழியப்பட்ட அல்லது எழுதப்பட்ட நாள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். ஆனால் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளும், பொதுவிடுமுறைநாட்களும் தவிர்க்கப்படல் வேண்டும்.

## பாகம் VI

### குடியியல் வழக்குகளில் முத்திரைகளும், செலவுத்தொகைகளும்

குடியியல் வழக்குகளில் முத்திரைத் தீர்வை.

64. ஆரம்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படும் ஒவ்வொரு குடியியல் வழக்கு தொடர்பிலும், விடயத்திற்கேற்ப வழக்காளியின் பிராதிலும், எதிராளியின் மறுமொழியிலும், எதிராளியின் எதிர்க்கோரிக்கைக்கான வழக்காளியின் மறுமொழியிலும் ஒரு ரூபாய் பெறுமதிகொண்ட முத்திரையொன்று ஒட்டப்படுதல் வேண்டும்.

செலவுத் தொகைகள்.

65. குடியியல் வழக்கொன்று தீர்மானிக்கப்பட்டதன்மேல், ஆரம்ப நீதிமன்றம் ஒவ்வொன்றும் நியாயமானதெனக் கருதுகின்ற தொகையிலான செலவுத்தொகைகளை வழக்காளி ஒருவருக்கு அல்லது எதிராளி ஒருவருக்குத் தீர்த்தளிப்பதற்கு அத்தகைய நீதிமன்றம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

## பாகம் VII

### சமாதானக் குலைவு ஏற்படுமென அஞ்சப்படுமிடத்து அல்லது சமாதானக் குலைவு ஏற்படுதல் சாத்தியமாகவுள்ளவிடத்து, காணி சம்பந்தமான பிணக்குகள் பற்றிய விசாரணைகள்

காணி சம்பந்தமான பிணக்குகள் பகிரங்க மன்றமொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்படல்.

66. (1) காணி சம்பந்தமான பிணக்கொன்றன் காரணத்தினால் சமாதானக் குலைவு ஏற்படுமென அஞ்சப்படுகின்றவிடத்தெல்லாம் அல்லது சமாதானக் குலைவு ஏற்படுதல் சாத்தியமாகவிருக்கின்றபோதிலெல்லாம்—

(அ) பிணக்கை விசாரிக்கும் பொலிசு அலுவலர்—

(i) காணி எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்திருக்கின்றதோ அந்த ஆரம்ப நீதிமன்றத்தில் பிணக்குச் சம்பந்தமான தகவலொன்றை இயன்றளவு

தாமதமின்றிக் கோப்பிடுதல் வேண்டும் என்பதுடன், தகவல் கோப்பிடப்பட்ட தேதியை உடனடுத்து எந்த நாளன்று அத்தகைய நீதிமன்றத்தின் அமர்வுகள் நடைபெறுகின்றனவோ, அந்த நாளன்று அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் பிணக்கிற்கான கட்சிக்காரர் ஒவ்வொருவரும் தோன்றுவதற்கென முறியொன்றை எழுதிநிறைவேற்றுமாறு அவர்களைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்; அல்லது

(ii) சமாதானத்தைப் பேணிக்காக்கும் நலன்கருதி அவசியமாயின், பிணக்கிற்கான கட்சிக்காரர்களைக் கைதுசெய்து, காணி எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்திருக்கின்றதோ அந்த ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னர், சட்டப்படி அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக, அவர்களை உடனடியாக முன்னிலைப் படுத்துதல் வேண்டுமென்பதுடன், அதேநேரத்தில் பிணக்குப் பற்றிய தகவலை அந்த நீதிமன்றத்தில் கோப்பிடுதலும் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய பிணக்கிற்கான கட்சிக்காரர் எவரும், நிகழ்வுகளையும் கோரப்படும் நிவாரணத்தையும் தருகின்றதும், பிணக்கிற்கான ஏனைய கட்சிக்காரர்களின் பெயர்களையும் முகவரிகளையும் எதிர்வாதிகளாகக் குறித்துரைக்கின்றதுமான சத்தியக்கடுதாசி மூலம் தகவலொன்றை அத்தகைய ஆரம்ப நீதிமன்றத்தில் கோப்பிடலாம்; அத்துடன், அத்தகைய நீதிமன்றமானது, அதன் வழமையான நடைமுறையின்மூலம் அல்லது பதிவஞ்சல் மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் நாளன்று நீதிமன்றத்தில் தோன்றுமாறு பெயர்குறிக்கப்பட்ட கட்சிக்காரர்களுக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அத்தகைய நாள், தகவல் கோப்பிடப்பட்ட நாளிலிருந்து இரண்டுவார காலத்திற்குப் பிந்தாததாகவிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆரம்ப நீதிமன்றமொன்றில் தகவலொன்று கோப்பிடப்படுகின்றவிடத்து, ஆரம்ப நீதிமன்றமானது, இப்பாகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள முறையில், தகவலானது எந்தப் பிணக்குடன் சம்பந்தப்பட்டதோ அந்தப் பிணக்கை விசாரணை செய்வதற்கும், அதன் மீது தீர்மானமொன்றைச் செய்வதற்கும், அல்லது கட்டளையை ஆக்குவதற்கும் நியாயாதிக்கம் உடையதாதல் வேண்டும் என்பதுடன், இந்நியாயாதிக்கம் இத்தால் அதற்குரித்தாக்கவும்படுகின்றது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்சிக்காரர் முன்னிலைப்படுத்தப்பட்ட தேதியன்று அல்லது அவ்வுட்பிரிவின் கீழ் அவர்கள் தோன்றுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, கட்சிக்காரர்களையும், அக்கறைகொண்டுள்ள எவரேனும் ஆட்களையும், அவர்களது உரிமைக்கோரிக்கைகளைக் கூறும் சத்தியக்கடுதாசிகளையும், அத்துடன் அவர்கள் எந்த ஆவணங்கள் மீது நம்பியுள்ளார்களோ அந்த ஆவணங்களையும் (அல்லது அவற்றின்

அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளையும்) சேர்த்துக் கோப்பிடும்படி பணித்து நீதிமன்றமானது நாளொன்றை நியமித்தல் வேண்டும். அந் நாளானது, கட்சிக்காரர்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து அல்லது அவர்கள் தோன்றுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வாரங்களுக்குப் பிந்தாததாகவிருத்தல் வேண்டும்.

(4) நீதிமன்றமானது, தகவல் கோப்பிடப்பட்டதிலிருந்து ஒரு வாரத்திற்குப் பிந்தாமல், காணி சம்பந்தமான பிணக்கொன்று எழுந்துள்ளதென அறிவிக்கின்றதும், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று (அத்தகைய தேதி, அந்த வழக்கு நீதிமன்றத்தில் அடுத்துக் கூப்பிடப்படவுள்ள நாளாகவிருத்தல் வேண்டும்) நீதிமன்றத்தில் தோன்றுமாறு அக்கறைகொண்டுள்ள எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துகின்றதுமான அறிவித்தலொன்றை, பிணக்கின் விடயப்பொருளாகவுள்ள காணியில் அல்லது காணியின் ஏதேனும் பாகத்தில் துலாம்பரமான இடமொன்றில் ஒட்டுவித்தல் வேண்டும் :

ஆயின், தகவலானது பொலிசு அலுவலர் ஒருவரால் கோப்பிடப்பட்டிருக்கின்றவிடத்து, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிவித்தலானது, அக்கறைகொண்டுள்ள ஆள், நீதிமன்றத்தில் தோன்றுவதோடு மேலதிகமாக, அவரது உரிமைக்கோரிக்கைகளைக் கூறும் சத்தியக்கடுதாசிகளை அவர் எந்த ஆவணங்களின்மீது நம்பியிருக்கின்றாரோ அந்த ஆவணங்களுடன் (அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன்) சேர்த்துக் கோப்பிடுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தலும் வேண்டும்.

(5) எவையேனும் சத்தியக்கடுதாசிகளையும் ஆவணங்களையும் கோப்பிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று அவை கோப்பிடப்படுமிடத்து, நீதிமன்றமானது, சத்தியக்கடுதாசிகளைக் கோப்பிடும் கட்சிக்காரர்களினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, எதிர்ச் சத்தியக்கடுதாசிகளை ஆவணங்களுடன் (எவையேனுமிருப்பின்) சேர்த்துக் கோப்பிடுவதற்காக இரண்டு வாரங்களை விஞ்சாத கால அவகாசத்தை அத்தகைய கட்சிக்காரர்களுக்கு வழங்குதல் வேண்டும். எதிர்ச் சத்தியக்கடுதாசிகளைத் தயாரிப்பதற்கென அத்தகைய கட்சிக்காரர்கள் அல்லது அவர்களது சட்டத்தரணிமார் பதிவாளர் முன்னிலையில் பதிவேட்டைப் பார்வையிடுவதற்கு ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அனுமதித்தல் வேண்டும்.

(6) சத்தியக்கடுதாசிகளையும் ஆவணங்களையும் கோப்பிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, எதிர்ச் சத்தியக்கடுதாசிகளைக் கோப்பிடுவதற்கான விண்ணப்பம் எதுவும் செய்யப்படாதிருக்கின்றவிடத்து, எதிர்ச் சத்தியக்கடுதாசிகளைக் கோப்பிடுவதற்கான தேதியன்று, அத்தகைய சத்தியக்கடுதாசிகளும் ஆவணங்களும் கோப்பிடப்படினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, வழக்கை விசாரணைக்கென நிர்ணயிக்குமுன்னர், நீதிமன்றமானது, கட்சிக்காரர்களையும் அக்கறைகொண்டுள்ள ஆட்களையும் (எவரேனுமிருப்பின்) பிணக்கை இணக்கித் தீர்க்கும்படி தூண்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்தல் வேண்டும் ; அத்துடன் கட்சிக்காரர்களும் அக்கறைகொண்டுள்ள ஆட்களும் இணக்கித்தீர்ப்பதற்கு உடன்படுவார்

களாயின், அந்த இணக்கத் தீர்வானது பதியப்படுதல் வேண்டும் என்பதுடன், கட்சிக்காரர்களாலும் அக்கறைகொண்டுள்ள ஆட்களாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் இணக்கத்தீர்வின் நியதிகளுக்கிணங்கக் கட்டளையொன்று ஆக்கப்படுதலும் வேண்டும்.

(7) கட்சிக்காரர்களும் அக்கறைகொண்டுள்ள ஆட்களும் (எவரேனுமிருப்பின்) இணக்கத்தீர்வு காணுதவிடத்து, நீதிமன்றமானது வழக்கை விசாரிப்பதற்குத் தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்; அத்தேதி, விடயத்திற்கேற்ப சத்தியக்கடுதாசிகளும் ஆவணங்களும் அல்லது எதிர்ச் சத்தியக்கடுதாசிகளும் ஆவணங்களும் கோப்பிடப்படுவதற்கென வழக்குக் கூப்பிடப்பட்ட தேதியிலிருந்து இரு வாரங்களுக்குப் பிந்தாததாகவிருத்தல் வேண்டும்.

(8) (அ) கட்சிக்காரர் ஒருவர் அல்லது அக்கறைகொண்டுள்ள ஆள் ஒருவர் இப்பாகத்தின்கீழ் தமது தோன்றுதலைப் பதியும்படி தேவைப் படுத்தப்பட்டுள்ளவிடத்து, அவர், சட்டத்தரணி ஒருவர் மூலம் தமது தோன்றுதலைப் பதியலாம்.

(ஆ) கட்சிக்காரர் ஒருவர் தோன்றத் தவறுமிடத்து அல்லது தோன்றியிருந்தும் தமது சத்தியக்கடுதாசியையும் ஆவணங்களையும் (எவையேனுமிருப்பின்) கோப்பிடத் தவறுமிடத்து, அவர் தோன்றத் தவறியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், விசாரணையில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராதலும் ஆகாது; ஆனால் நீதிமன்றமானது, அதன் தீர்மானத்தைச் செய்வதிலும் கட்டளையை ஆக்குவதிலும், அத்தகைய கட்சிக்காரரின் உரிமைக்கோரிக்கை தொடர்பில், அதன் முன்னிலையில் உள்ள அத்தகைய சான்று முதலியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும்.

*விசாரணையானது சுருக்கமுறையில் நடைபெறல் வேண்டும்.*

67. (1) இப்பாகத்தின்கீழான விசாரணை ஒவ்வொன்றும் சுருக்கமுறையில் நடைபெறல் வேண்டும் என்பதுடன், அவ்விசாரணை தொடங்கியதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முடிவடைதலும் வேண்டும்.

(2) ஆரம்ப நீதிமன்ற நீதிபதி விசாரணை முடிவடைந்ததிலிருந்து ஒரு வாரகாலத்தினுள் தமது கட்டளையைக் கூறுதல் வேண்டும்.

(3) விசாரணை முடிவுறுதிருக்கும்வரை, விசாரணையின் முடிவில் இப்பாகத்தின்கீழ் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி ஆக்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஏற்பாட்டினைக் கொண்டுள்ள இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்குதல் அந்நீதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*பிணக்கு உடைமை சம்பந்தமானதாகவிருக்குமிடத்து, ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் தீர்மானமும் கட்டளையும்.*

68. (1) பிணக்கானது ஏதேனும் காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைபற்றியதாகவிருக்குமிடத்து, 66 ஆம் பிரிவின்கீழான தகவல் கோப்பிடப்பட்ட தேதியன்று அக்காணியை அல்லது அதன் பாகத்தை உடைமை கொண்டிருந்தவர் யார் எனத் தீர்மானிப்பதும், அத்தகைய காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கு யார் உரித்துடையவரென்பது பற்றிய கட்டளையை ஆக்குவதும், விசாரணை நடாத்தும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஆள் ஒருவரோ, ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களோ,

தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினல் ஆக்கப்பட்ட கட்டளையொன்றன்கீழ் அல்லது தீர்வையொன்றன்கீழ் அக்காணியிலிருந்து அல்லது அதன் பாகத்திலிருந்து வெளியேற்றப்படும் வரையில், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட முறையில், அக்காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கு உரித்துடையவரென அத்தகைய ஆளை அல்லது ஆட்களை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளையின் அல்லது தீர்வையின் அதிகாரத்தின்கீழன்றி வேறுவகையாகச் செய்யப்படும் அத்தகைய உடைமைக்கான இடையீடுகள் யாவற்றையும் தடைசெய்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் காணியை அல்லது காணியின் ஏதேனும் பாகத்தை உடைமைகொள்வதற்கான உரிமை பற்றிய பிணக்கொன்றை விசாரணை செய்யும்போது, காணியை அல்லது அதன் பாகத்தை உடைமை கொண்டிருந்த எவரேனும் ஆள் 66 ஆம் பிரிவின்கீழான தகவல் கோப்பிடப்பட்ட தேதிக்கு நேர்முன்னர் இரு மாத காலத்தினுள் வலோற்காரமாக உடைமை பறிக்கப்பட்டிருக்கின்ருர் என ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திருப்தியடையமிடத்து, அவர் அப்பயன்பட தீர்மானமொன்றைச் செய்யலாம் என்பதுடன், உடைமை பறிக்கப்பட்ட கட்சிக்காரருக்கு உடைமை மீளவொப்படைக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றதும், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றன் அல்லது தீர்வையொன்றன் அதிகாரத்தின்கீழன்றி வேறுவகையாக அத்தகைய உடைமைக்கான இடையீடுகள் யாவற்றையும் தடைசெய்கின்றதுமான கட்டளையொன்றையும் ஆக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வெளிப்படுத்துகை, தடை ஆகியனவற்றுடன் சேர்த்து, அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் கட்சிக்காரருக்கு அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காணியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் உடைமை மீளவொப்படைக்கப்படுதல் வேண்டுமெனக் கூறும் பணிப்பொன்றையும் உள்ளடக்கலாம்.

பிணக்கு வேறு ஏதேனும் உரிமை பற்றியதாகவிருக்குமிடத்து, ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் தீர்மானமும் கட்டளையும்.

69. (1) பிணக்கானது, ஏதேனும் காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கான உரிமை அல்லாத அத்தகைய காணியின் அல்லது அதன் பாகத்தின் வேறு ஏதேனும் உரிமை பற்றியதாகவிருக்குமிடத்து, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, பிணக்கிலுள்ள விடயமாக அமையும் உரிமைக்கு யார் உரித்துடையவர் எனத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவின்கீழான கட்டளையொன்று, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆள், கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான காணியிலுள்ள அல்லது அதன் ஏதேனும் பாகத்திலுள்ள அல்லது அக்காணி தொடர்பிலான அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பிலான அத்தகைய ஏதேனும் உரிமைக்கு (அத்தகைய ஆளின் அத்தகைய உரிமை தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றன் பயனுக அல்லது தீர்வையொன்றன் பயனுக இழப்பிக்கப்படும்வரையில்) உரித்துடையவராதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய கட்சிக்காரர் அத்தகைய உரிமையைப் பிரயோகிக்கும்போது, மேற்கூறியவாறான கட்டளையொன்றின் அல்லது தீர்வையொன்றின் அதிகாரத்தின்கீழ் அல்லாது வேறுவகையில் ஏற்படக்கூடிய எல்லா இடையீடுகளையும் தலையீடுகளையும் தடைசெய்யலாம்.

70. இப்பாகத்தின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறாக, காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கான உரிமையைப் பிரயோகிப்பதற்காக அல்லது அத்தகைய காணியிலுள்ள ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்காக, அல்லது அத்தகைய காணியிலுள்ள ஏதேனும் பயிரின் அல்லது விளைபொருளின் விற்பனை சம்பந்தமாக, அல்லது அத்தகைய காணியிலுள்ள ஏதேனும் உரிமையைப் பிரயோகிக்கும் முறைக்காக, அல்லது ஏதேனும் பயிரின் அல்லது விளைபொருளின் விற்பனையினால் பெறப்படும் வரும்படிகளின் கட்டுக்காவலுக்காக அல்லது அந்த வரும்படிகளைக் கையாளுவதற்காகப் பிணைப்பொறுப்புக் கொடுத்துதவுதல் பற்றிய அத்தகைய வேறு பணிப்புக்களையும் உள்ளடக்கலாம்.

உடைமைக்காக அல்லது ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்காகப் பிணைப் பொறுப்புக் கொடுக்கப்படும்படி கட்டளையிடலாம்.

71. பிணக்கிற்காக கட்சிக்காரர்கள் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றாதவிடத்து அல்லது தோன்றியிருந்தும் அல்லது முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தும் சத்தியக்கடுதாசிகள் எவற்றையும் (அவற்றுடன் ஆவணங்களை இணைத்து அல்லது ஆவணங்களை இணைக்காமல்) கோப்பிடாதிருக்குமிடத்து, நீதிமன்றமானது—

(அ) பிணக்கு உடைமை பற்றியதாகவிருக்கும் விடயத்தில், உடைமையில் இருக்கும் கட்சிக்காரரைத் தொடர்ந்து உடைமையில் இருக்கும்படி அனுமதித்துக் கட்டளை ஆக்குதல் வேண்டும், அத்துடன்

(ஆ) பிணக்கு வேறு ஏதேனும் உரிமை பற்றியதாகவிருக்கும் விடயத்தில், அத்தகைய உரிமை பற்றி இதுகாறும் உள்ள நிலை தொடர்ந்திருக்கும்படி அனுமதித்துக் கட்டளை ஆக்குதல் வேண்டும்.

கட்சிக்காரர் எவரும் தோன்றாதவிடத்து ஆக்கப்படும் கட்டளை.

72. இப்பாகத்தின்கீழான தீர்மானமும், கட்டளையும் பின்வருவனவற்றைச் சோதனை செய்தபின்னரும், சீர்தூக்கிப்பார்த்ததன்பின்னரும் ஆக்கப்படுதல் வேண்டும் :—

(அ) கோப்பிடப்பட்ட தகவலும், கொடுத்துதவப்பட்ட சத்தியக் கடுதாசிகளும், ஆவணங்களும் ;

(ஆ) கொடுத்துதவப்பட்ட சத்தியக்கடுதாசிகள்மீது அல்லது ஆவணங்கள்மீது எழும் ஏதேனும் கருமம் பற்றி நீதிமன்றம் அளிப்பதற்கு அனுமதிக்கக்கூடிய அத்தகைய வேறு சான்று ; அத்துடன்

(இ) ஆரம்ப நீதிமன்ற நீதிபதி தமது தற்றுணிபின்படி அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய வாய்மொழிமூலமான அல்லது எழுத்திலான வாதவுரை.

ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அவரது தீர்மானத்துக்காக எந்த சான்று முதலியவற்றின் மீது செயலாற்றலாம் என்பது.

73. இப்பாகத்தின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றை மீறிச் செயலாற்றும் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

கட்டளையை மீறியமைக்கான அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறியமைக்கான தண்டம்.

குடியியல் துடர்ச்சியில் நிலைநாட்டப் படக்கூடிய உரிமையை அல்லது அக்கறையை கட்டளை பாதிப்ப தாகாது.

74. (1) குடியியல் துடர்ச்சியொன்றில் எவரேனும் ஆள் நிலைநாட்டக் கூடியதும் ஏதேனும் காணியில் அல்லது காணியொன்றின் பாகத்தில் உள் ளதுமான உரிமை எதனையும் அல்லது அக்கறை எதனையும் இப்பாகத்தின் கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று பாதித்தல் ஆகாது அல்லது பங்கப் படுத்துதல் ஆகாது; அத்துடன் பிணக்கில் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு இப்பிரிவுகளின் பயன் பற்றி விளக்குவது, இப்பாகத்தின்கீழ் விசாரணை யொன்றை நடாத்தத் தொடங்கும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமை யாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழான ஏதேனும் தீர்மானத்திற்கெதிராக அல்லது கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுதல் ஆகாது.

"காணி சம் பந்தமான பிணக்கு" என்பதன் பொருள்.

75. இப்பாகத்தில் "காணி சம்பந்தமான பிணக்கு" என்பது, ஏதே னும் காணியினதும், அல்லது ஒரு காணியின் பாகத்தினதும், அதன் மீதான கட்டிடங்களினதும் உடைமைக்கான உரிமை பற்றிய ஏதேனும் பிணக்கையும், அல்லது அக்காணியின் எல்லைகள் பற்றிய ஏதேனும் பிணக் கையும், ஏதேனும் காணியில் அல்லது ஒரு காணியின் பாகத்தில் பயிர் செய்வதற்கான உரிமை பற்றிய ஏதேனும் பிணக்கையும் ஏதேனும் காணி யில் அல்லது காணியின் பாகத்தில் உள்ள பயிர்களுக்கான அல்லது விளை பொருளுக்கான உரிமை பற்றிய ஏதேனும் பிணக்கையும் அல்லது காணி தொடர்பிலான வசதியுரிமை என்ற தன்மையிலான ஏதேனும் உரிமை பற்றிய பிணக்கையும் உள்ளடக்கும் என்பதுடன், இப்பாகத்தில் "காணி" பற்றிய குறிப்பீடு எதுவும் அக்காணியின் மீது அமைந்துள்ள ஏதேனும் கட்டிடம் பற்றிய குறிப்பீடொன்றையும் உள்ளடக்கும்.

நீதிமன்றத்தின் கட்டளைகளை பிசுக்கால் நிறைவேற்று தல்.

76. நீதிமன்றப் பிசுக்கால் அவசியமாகுமிடத்து, இப்பாகத்தின் ஏற் பாடுகளின்கீழ் ஆக்கப்படும் எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்றி வைத் தல் வேண்டும்.

முடிவுறுதிருக் கும் நட வடிக்கைகள்.

77. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று நீதிவான் நீதிமன்றங்களில் முடிவுறுதிருப்பவையும், 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழானவையு மான எல்லா நடவடிக்கைகளும், தோதான ஆரம்ப நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்த கைய ஆரம்ப நீதிமன்றமானது, அந்நடவடிக்கைகளைக் கவனத்திற்குட் படுத்தவும் விசாரணை செய்யவும், அவைபற்றித் தீர்மானமொன்றைச் செய்யவும், அல்லது கட்டளையொன்றை ஆக்கவும், அல்லது அவற்றைத் தொடர்ந்து நடாத்துவதற்கும், முடிவுறுத்துவதற்கும் நியாயாதிக்கம் கொண்டதாதலும் வேண்டும்; அத்துடன், இந்நியாயாதிக்கம் இத்தால் அதற்குரித்தாக்கவும்படுகின்றது; இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் நீதிவான் நீதிமன்றத்தினுற் செய்யப்பட்ட தீர்மானம் எதுவும், ஆக்கப்பட்ட கட்டளை எதுவும், அவை தோதான ஆரம்ப நீதி மன்றத்தினால் செய்யப்பட்டனவென்றாற்போன்று அல்லது ஆக்கப்பட்டன வென்றாற்போன்று அதே வலுவும் பயனும் உடையனவாதல் வேண்டும்:

ஆயின், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று சான்றளித்தலானது தொடங்கியுள்ள அத்தகைய ஏதேனும் நடவடிக்கை, சாத்தியப்படக்கூடியளவு, இப்பாகத்தில் ஏற்பாடுசெய்யப் பட்ட முறையில் சொல்லப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படுதலும் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் VIII

### ஏற்பாடெதுவும் செய்யப்படாத விடயங்கள்

78. இச்சட்டத்தில் ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிராத கருமம் எதுவும் எழுமாயின், அந்த விடயம் அல்லது நடவடிக்கை குற்றவழக்குத் தொடுப்பாக அல்லது நடவடிக்கையாக இருக்குமிடத்து, அதேபோன்ற கருமம் ஒன்றை ஆளுகின்ற 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளும், அந்த விடயம் குடியியல் வழக்கொன்றாக அல்லது நடவடிக்கையொன்றாகவிருக்குமிடத்து, அதேபோன்ற கருமம் ஒன்றை ஆளுகின்ற குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளும், விடயத்தின் நீதி நியாயம் தேவைப்படுத்தக்கூடியவாறாக அத்தகைய பொருத்தமான இசைவாக்கங்களுடன் ஏற்றுக்கொள்ளப்படுதலும் ஏற்புடையனவாக்கப்படுதலும் வேண்டும். ஏற்பாடெதுவும் செய்யப்படாத விடயங்கள்.